# முஸ்லிம் சமஷ்டி



முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு

வேதாந்தி சேகு இஸ்ஸதீன்

ஹம்து ஸலவாத்துடன்

சோதர சோதரியருக்கு!
என்று தொடங்கியது என்று தெரியாத
ஒரு யாத்திரையில்
எங்கு முடியும் என்று தெரியாத
ஒரு பாதையில்
பல சந்தோசங்களோடும்
சில சந்தேகங்களோடும்
நமது யாத்திரை தொடங்கிற்று.

நமது வழியில் நாம் சந்தித்த
ஏமாற்றங்களும் தோல்விகளும்
நம்மை உருக்கி வார்த்து
நம்மை மனித நேயர்களாக்கின

நமது விடுதலைக்காக
நமது தோளில் சுமத்தப்பட்ட சிலுவை
நாம் தாங்கமுடியாத
சுமையாகவே இருக்கிறது.

எனினும் நமது தோழமையும் உறுதியும்
நம்மை போராளிகளாகவே
வாழச் செய்கின்றன

இறுதி வரை தொடர்வோம் என்ற
எமது நம்பிக்கையும்
இருக்கும் வரை போராடும் என்ற
நமது துணிவும்
நமது பாதைக்கு வெளிச்சத்தையும்
பாதங்களுக்குப் பலத்தையும் தருகின்றன.

வரலாறு படைத்த நமது நேசமும்
வாகை சூடும் நமது நல்லெண்ணமும்
நமது வாழ்வின் வசந்த கால விருட்சமாய்
மலர்களையும் கனிகளையும் சொரியும்.

வாஞ்சையுள்ள

# தொண்ணூறின் மாதங்கள்

- வேதாந்தி

நீயும் நானும் தமிழர்கள் தான்
அந்த ஆழ்ந்த நம்பிக்கையில்
உறங்கிக் கொண்டிருந்த வேளை
என்னை ஒரேயடியாய்
திடுக்கிட்டெழச் செய்தது யார்?

பின்னர் நான் தூங்கப் பயந்தேன்
எனது நம்பிக்கையை இன்னொரு தடவை
சோதிக்கவிட நான் தயங்கினேன்.

யாரின் கெடுபிடிகள் எனது தமிழை
என்னிடமிருந்து பிரிக்கப் பார்க்கின்றன?
நான் யாரைப் பயருகிறேன்?

இன்னொரு தடவை
நான் தமிழ் கவியின் தாலாட்டில்
நம்பிக்கைத் தொட்டிலில்
தூங்கத் தயங்குகிறேன்
என்னை வெருளச் செய்தது யார்?
ஒரேயடியாய் பிரிந்துவிட
நான் மறுக்கிறேன்.

நான் புணர்ந்த போது
தமிழ் பெற்ற இன்பம் பற்றி
தமிழிடமே கேட்டுப்பார்

என்னைத் தமிழில் இருந்து பிரித்து
தமிழையும் தண்டித்தவிட
யார் போர் முரசு கொட்டினார்?
சொல்! நீ இல்லைதானே?

வேதாந்தி M.H.Cegu Issadeen
Attorney-at-Law,
Former Minister,
Madina Puram, Irakkamam.
0763861999, 0712345699

எனது அறியாமைக்கு
இத்தனை பெரிய தண்டனையா?
எனது பலஹீனத்திற்கு
இவ்வளவு பெரிய படையெடுப்பா?
நான் சமாதானத்தையே நேசித்தேன்.
கௌரவமான சமாதானம்
எங்கோ ஒரு மூலையில்
எனக்கும் வீர வரலாறு உண்டு

உனக்கு யாரோ செய்ததென்று
எனக்கு நீ செய்யலாமா?
சொல்! அவனும் நானும் ஒன்றா?
ஆனால் நீ ஏன் என்னளவில்
அவனாகப் பார்க்கிறாய்?
ஏன் நீயும் அவனும் ஒன்றா?
இல்லையே!
இல்லவே இல்லையே!
இருக்கவும் கூடாதே!
நீ இருக்கிறாயா?
சொல்! நான் யார்?

இந்த மண்ணை உவந்த உயர்ச்சியில்
தாய்நாடு என்றோமே!
தமிழ்மொழி மாநிலம் என்றோமே!
சன்னமான எனது குரலிலான
மிருதுவான எனது மொழியை
நீ கண்டுகொண்டதே இல்லையா?
என்னை ஏன் ஹிம்சித்தாய்!

காதலைப் பாடிய தமிழில்
வசைபாட வைக்கப்பார்க்கிறாயா?
போதும்! வேண்டாம்!
அதிகமாய்ச் சோதிக்காதே!

அகவுரை

## சொல்லுறத சொல்லிப்புட்டன்...

ஹம்து ஸலவாத்துடன்

வடகிழக்கு தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக முஸ்லிம் தரப்பிலிருந்து இதுவரை எந்தவிதமான தீர்வுத்திட்டமும் முன்மொழியப்படவில்லை. இந்த விடயம் மனதை நெருடுவதாகவே இருந்து வருகிறது.

வடகிழக்கு தேசிய இனப்பிரச்சினை பற்றி முஸ்லிம்களின் பிரதிநிதித்துவ கட்சிகள் எழுத்தில் எந்தவிதமான தீர்வுத் திட்டத்தையும் இதுவரை அரசியல் அமைப்பு சார்பான குழுவுக்கு அனுப்பி வைத்திருக்கவில்லை. அதுவும் அல்லாமல் அவை அது பற்றி எதுவித அக்கறையும் எடுத்துக்கொள்ளாமல் இருப்பது என்னவோ மாதிரியாய் இருக்கிறது.

அது பற்றிப் பேசுவதற்குரிய அடிப்படையை ஒரு கட்சியும் இன்னும் பூரணமாக அறிந்து வைத்திருக்கிற மாதிரி தெரியவில்லை. உட்கட்சிப் பூசல்கள், முஸ்லிம் தலைமைத்துவத்துக்கான போட்டிகள், பட்டம் பதவி அற்ற கையறுநிலை போன்றவற்றால் அவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அவைகளின் கவனம் நம்மில் இல்லை. இது நமக்கு வருத்தத்தைத் தருகிற ஒரு விடயமே.

வடகிழக்கு இனப்பிரச்சினை தீர்வுக்கான நீடித்த அஹிம்சைப் போராட்டம் பரிணாம வளர்ச்சியாக வெடித்து வெளிவந்து தமிழர்கள் ஆயுதம் தாங்கத் தொடங்கிய நாளில் இருந்து நாம் வடகிழக்கில் அரசியல் தனித்துவமுள்ள, பிரத்தியேக தேசிய அடையாளமுள்ள ஒரு சமூகமாக படிப்படியாக மாற்றப் பட்டு வந்தோம்.

அன்றிலிருந்து வடகிழக்கு தமிழ் தேசியத்தின் சுயநிர்ணய உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வு தேடலிலிருந்து நாம் புறம் தள்ளப் பட்டு வேறுபடுத்தப்பட்டோம். அதைத்தொடர்ந்து வடகிழக்கில் நமது அமைதி பாதுகாப்பு, அடிப்படை உரிமைக்கான பிரச்சினைகள் புதிதாக தனியாக முளைத்தன. அவற்றுக்குரிய தீர்வு தேடும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். ஆயுத பலத்தில் நம்மை அடக்கி ஆள தமிழர்கள் முற்பட்டதை நாம் அங்கீகரிக்க முடியவில்லை. நாம் நமக்கானதொரு காலத்தை காத்திருக்க வேண்டியதாயிற்று. தமிழர்களுடனான நமது உறவு அதற்குப் பின்னர் தாமரை

இலை தண்ணீர்போல ஆயிற்று. எனினும் தமிழ்மொழி பொதுமையை மதித்து நாம் அவர்களுடன் வாழ்ந்து வந்தோம். வடகிழக்கு முஸ்லிம் தேசிய பிரச்சினையை நமக்கு தொடக்கி வைத்தவர்கள் நமது சகோதர சமுகத் தமிழ் தேசியத்தினர் தான்.

'85, '90 களின் பயங்கரவாதிகள் தொடர்பான நினைவுகள் நமக்கு இன்னும் வலிக்கின்றன. நம் எதிரிக்குக்கூட அப்படியொரு அவலநிலை ஏற்பட்டுவிடக் கூடாதென நாம் பிரார்த்திக்கும் அளவுக்கு '85ஐ தொடர்ந்த வருடங்களெல்லாம் அமைந்தன. அசத்தியம் நிலைப்பதில்லை. அசத்தியம் அழியக்கூடியது அசத்தியம் அழிந்தே தீரும். சத்தியம் வெல்லும் என்பது நாம் கண்டுவந்த வரலாறுகள். அது நம் வாழ்விலும் நடக்கிறது.

தமிழர்களின் உரிமைப்போராட்டங்கள் தொடர்பாக நாம் மிகுந்த அனுதாபம் உள்ளவர்களாக இருந்திருக்கிறோம். இவ்வளவுக்குப் பிறகும் நமது அனுதாபம் முற்றாய் அழிந்துவிடவில்லை. ஆனால் நம் மீதான அவர்களின் படை யெடுப்புகளை நம்மை சகித்துக் கொள்ள வைத்திருக்கும் எதிர்பாராத ஒரு வளர்ச்சிதான் அவர்களுடைய புறக் கணிப்பால் நாம் ஒரு புதிய தேசியமாகி விட்டுள்ள பிடிமானமாகும். அவ்வாறு நம்மில் ஒரு தேசிய உணர்வை உண்டாக்கி நாம் தனித்துவ முடைய ஒரு மக்கள் கூட்டமாய் பிரத்தியேக அரசியல் அடையாள முள்ள ஒரு சமூகமாய் நமது மக்களுக்கான சுயநிர்ணய உரிமைகளுக் காய் தனித்து நின்று போராடும் ஒரு தேசியமாய் நாம் ஆகுவதற்கான வழியை திறந்து வைத்தவர்கள் தமிழர்கள் தான். அதற்காய் அவர்களுக்கு நாம் நன்றி கூடச் சொல்லலாம்.

இன்று அவர்கள் முன் நாம் தலைநிமிர்ந்து நிற்கும் ஒரு தனித்த தேசியம். அதே வடகிழக்கில் அவர்களைப் போல் நமக்கான சுயநிர்ணய உரிமைகளை கோருவதற்கு வெளிக்கிட்டுள்ள ஒரு தனித்துவமுடைய தேசியம் நாம். அதனால் வடகிழக்கில் நமது தேசியத்துக்கான சுயநிர்ணய உரிமைகளை நாம் வென்றெடுப்பதை நமது வியூகங்கள் மூலம் நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. தேவை ஏற்படும் போது போராடிப் பெறவும் தயாராக வேண்டி உள்ளது. அதற்காக நாம் நமக்கு இப்போதைக்கு முக்கியத்துவமாக இருக்கும் உரிமை களைப் பற்றி மட்டும் சிந்திக்க வேண்டியுள்ளது. இப்போது நமக்கு முக்கியத்துவப்பட்டிருக்கும் பிரச்சினை புதிய அரசியல் அமைப்புக்கு வடகிழக்கு முஸ்லிம் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக முஸ்லிம்கள் முன்வைக்கப்போகின்ற தீர்வு ஆலோசனைகள் பற்றியதாகும்.

இது விடயம் தொடர்பாக தமிழர் தரப்பிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட ஆலோசனைப் பொதிகள் முன்வைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை (1) வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் இணைக்கப் பட வேண்டும் என்பதுவும் (2) அவ்வாறு இணைக்கப்பட்ட வடக்கு கிழக்குத் தமிழர்களுக்கென ஒரு சமஷ்டி ஆட்சி அதிகாரம் வழக்கப்படவேண்டும் என்பதுவுமாகும்.

நம்மைப் பொறுத்தவரை அவர்கள் அப்படிக் கேட்டதைப்பற்றி நமக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. வடக்கு கிழக்கோடு மேலதிகமாக பொலநறுவையையும் அவர்கள் சேர்த்துக் கேட்டிருந்தாலும் நமக்கு ஒரு ஆட்சேபனையும் இல்லை. தீர்வு முன்மொழிவுகள் அனைத்துமே சட்டமாக்கப் படுவதில்லை. அரசியல் அமைப்புத் திருத்தங்களை முழு உலகமுமே எதிர்பார்த்திருக்கிற மாதிரியான ஒரு தோற்றம் காட்டப்படுகிறது. தமிழர்கள் திட சங்கற்பத்தோடு இருக்கிறார்கள். நாமோ திரிசங்கு சொர்க்க நிலையில் இருக்கிறோம்.

அவர்கள் நமக்கு பிரச்சினையாக இல்லை. இருக்கவும் மாட்டார்கள் என்று இப்போது நம்புகின்ற பலம் நமக்கு வந்துள்ளது. பிரச்சினையாகிப் போகு மென்றால் நிரந்தர வடக்கு கிழக்குப் பிரிவினைக்கு அது வழி வைத்துவிடும். கிழக்குப் பிரிவினைக்கான மக்களபிப்பிராய வாக்கெடுப்பு யோசனையும் தூசு தட்டி துடைத்து எழுப்பப்பட்டுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் வாழுகின்ற தமிழர்களை இணைப்பதற்கு வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டுமென்று தமிழர்கள் சொல்கிறார்கள். இப்போது வடக்குத் தமிழர்களும், கிழக்குத் தமிழர்களும் இணைந்து தானே இருக்கிறார்கள். வடமாகாணமும், கிழக்கு மாகாணமும் இரண்டு மாகாணங்கள் ஆனாலும் அங்குள்ள இரு பிராந்தியத்தவர்களும் இலங்கை தமிழர்கள் தான். அரசாங்கத்திற்கு தேவைப் பட்டதற்காய் ஆள்போட்டு மாகாணங்களை பிரித்ததனால் தமிழர்களுடைய தாயுறவில் பிரிவு வந்துவிடுமா என்ன? எனவே வட மாகாணத் தமிழர்களும் கிழக்கு மாகாணத் தமிழர்களும் அந்நியோன்ய உறவோடு இருப்பதற்கு வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டுமென்பது அவசியமே அற்றது.

இணைப்பு அவசியப்படுவது தமிழர்களுக்கான ஆட்சி அதிகார அதிகரிப்புக்குத் தான். கிழக்கில் சுமார் 38%க்கும் சற்றுக் குறைவாகவே தான் தமிழர்கள் உள்ளனர். மற்றைய 62%க்கும் சற்று அதிகமானவர்கள் தமிழர்கள் அல்ல, அவர்கள் வேறு யார் யாராக இருந்தபோதும். அதனால் தமிழர்கள் மூன்றில் ஒன்று அளவில் சிறுபான்மையாக இருக்கும் கிழக்கு மாகாணத்தை

வடக்கோடு இணைக்கும்படி தமிழர்கள் கோருவது எந்த தர்ம நியாயத்தில் அடங்கும்? அந்த 62% க்கும் அதிகம் ஆன தமிழர் அல்லாதவர்களில் குறைந்த பட்சம் 15% வீத மானவர்களாவது தம்மையும் தமிழர்களோடு இணைத்துக் கொள்ளும்படி தமிழர்களிடம் வாக்குறுதி அளித்திருக்கிறார்களா? யார் அவர்கள்?

24% வீதமான சிங்களவர்களில் உள்ளவர்களா அப்படியான வாக்குறுதியை அளித்தவர்கள்? அப்படியானால் 38% ஆன தமிழர்களும், 15% ஆன சிங்களவர்களும் ஒன்றுசேரும்போது எளிய பெரும்பான்மை கிடைத்து விடுவதால் தமிழர்கள் வடக்கோடு கிழக்கை சிங்களவர்களின் அந்த ஆதரவினால் இணைத்துக் கொண்டு சமஷ்டி ஆட்சி கோரலாம்.

அதற்கு முஸ்லிம்களிடமிருந்து எந்த எதிர்ப்பும் கிளம்பாது என்பது உறுதி. ஆனால் தமிழர்களின் ஆட்சி அதிகார அதிகரிப்புக்காக கிழக்குச் சிங்களவர் களைச் சேர்த்துக் கொள்ள தமிழர்கள் தயாராக இருந்தாலும் சிங்களவர்கள் சேர்வார்கள் என்று கனவிலும் நினைக்கத் தேவையில்லை. எனவே கிழக்கில் 38% க்கும் குறைவாக இருக்கும் தமிழர்களுக்காக முழுக் கிழக்கு மாகாணத்தையும் வடக்குகோடு இணைக்கும்படி தமிழர் தரப்பு கோருவது சுத்த அநியாயமான, மட்ட ரகமான, பேராசையிலான கோரிக்கையாகும். இன்னும் அது கேலிக்கிடமானதுமாகும். தமிழர்களைப் பற்றி அடுத்த சமுகங்கள் இன்னும் இன்னும் தரக்குறைவாக எடுத்துக் கொள்ள வைக்கும் கோரிக்கையுமாகும்.

அந்த அநியாயம் ஒரு புறமிருக்க, கிழக்கில் வாழும் சிங்களவர்களோ முஸ்லிம்களோ கிழக்கோடு வடக்கை இணைப்பதை இப்போதுள்ள நிலையில் பரவலாக விரும்பியவர்களாக இல்லை. இது தமிழர்களுக்கு மனப்பாடமான சங்கதி. பிரிவினையின் கைதான் ஓங்கியிருக்கிறது. எனவே வடக்கோடு கிழக்கை இணைப்பதற்கான பெரும்பான்மையும் இல்லை, ஆதரவும் இல்லை, அழுத்தங்களும் சரிபட்டு வரும் சாயத்தியமும் இல்லை. ஆதரவைப் பெறுவதற் குரிய வழிகளையும் தமிழர்கள் அறியாதிருந்தாலோ அல்லது அது தொடர்பான முயற்சிகளில் முழு மனதாய் ஈடுபடாமல் இருந்தாலோ வடக்கையும் கிழக்கையும் தமிழர்களின் வீம்புக்காக இணைத்துக் கொடுக்க வேண்டுமென்ற அவசியம் அரசியலமைப்போருக்கு இருக்காது.

எப்படியாவது வடக்கோடு கிழக்கை இணைத்துத்தான் ஆகவேண்டு மென்பதில் தமிழர்கள் விடாப்பிடியாக இருந்து, கிழக்கில் பெரும் பான்மையைக் காட்ட

முடிந்தால் அரசாங்கத்திற்கு கிழக்கை பொது எதிர்க் கட்சியின் மிரட்டுதலுக் காக பணிந்து நிராகரிக்க முடியாது. நாலா புறத்து அழுத்தங்களுக்கும் தலை சாய்க்க வேண்டிவரும்.

எனவே இணைப்பை நனவாக்க, நிஜமாக்காக தமிழர்கள் நியாய வரம்புகளை கடக்காத என்ன விலை கொடுக்கவும் தயாராக இருக்க வேண்டும். அவர்களுக்கு இப்போது அவசியமாகப் படுவதெல்லாம் கிழக்கில் பெரும் பான்மையைக் காட்டுவதுதான். கிழக்குத் தமிழர் 38% த்தோடு கிழக்கு சிங்களவர் 24% த்தையும் சேர்த்தால் 62% ஆகி இணைப்புக்கு தாராளமாக போதுமாகிவிடும். ஆனால் சிங்களவர்களைச் சம்மதிக்க வைக்க ஒருபோதும் முடியப்போவதில்லை. அதற்காக மெனக்கெடத்தேவையுமில்லை. அதனால் மிச்சமுள்ளது கிழக்கு முஸ்லிம்கள் மட்டும்தான். தமிழர்களையும் விட கிழக்கில் ஒரு சொட்டு அதிகமாக முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.

கிழக்கு முஸ்லிம்களை இணைப்புக்கு ஆதரவாக எவ்வாறு சம்மதிக்க வைப்பதென்று இரவும் பகலும், நாட்கணக்காக யோசித்து பகீரதப் பிரயத்தனத்தின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா கண்டு பிடித்த வழி வடகிழக்கு இணைக்கப்பட்ட ஆட்சியில் முதலாவது முதலமைச்சர் பதவியை ஒரு முஸ்லிமுக்கு கொடுக்க இருப்பதாக பத்திரிகை அறிக்கையை விடுவது மாத்திரம் தான். அப்படி அறிவித்தால் கிழக்கு முஸ்லிம்கள் இணைப்புக்கு விழுந்தடித்து ஆதரவு வழங்குவார்கள் என்பதுதான் ஐயாவின் புதிய கண்டு பிடிப்பு. சம்பந்தன் ஐயாவை உரிமைப் போராளிகளின் கூட்டத்திலிருந்து உடனடியாக இடைநிறுத்தம் செய்ய வேண்டும். உரிமைப் போராளிகளின் தலைவர் பேசுகிற பேச்சா இது? வட மாகாண சபை முதலமைச்சர் மரியாதைக்குரிய முன்னாள் நீதி அரசர் விக்னேஸ்வரன் பரவாயில்லை போல தெரிகிறது. அவர், இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்களுக்கு ஒரு தன்னாட்சிப் பிராந்திய சபை உருவாகும் என்றாவது தமது சபை தீர்வு வரைபில் சொல்லியிருக்கிறார். அதனையே முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உண்மையைச் சொன்னால் அதற்குப் பிறகுதான் கிழக்குப் பிரிவினை வாதக்கோஷம் உரத்து ஒலிக்கத் தொடங்கியது என்பது வேறு விசயம்.

வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் ஆதரவு அளிக்க வேண்டும். முதலாவது முதலமைச்சர் பதவி கொடுக்கப்படும் என்பதுதான் சம்பந்தன் ஐயாவின் வடகிழக்கு முஸ்லிம்களுக்கான தீர்வத்திட்ட முன்மொழிவு. பாவமாய் இல்லையா?

வடகிழக்கு முஸ்லிம் தேசியத்திற்கு எந்த ஆட்சி அதிகாரமும் இல்லை. வடகிழக்கு இணைப்புக்கான ஆதரவை வழங்கினால் முதலாவது முதலமைச்சர் பதவி தரப்படும். அவ்வளவுதான். போதும்தானே! அந்த கொச்சைப் பேச்சு ஒரு புறம் கிடக்கட்டும்.

தமிழர்களுக்கு வடகிழக்கு இணைப்பு அவசியமென்றால், அந்த இணைப்பு கிழக்கில் நடைபெற சாத்தியமான மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பால் தான் தீர்மானிக்கப்படவும் போகிறது என்றால், மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பை வென்றெடுப்பதற்கான வழிகளைத்தேடி வேலைத்திட்டங்களை தமிழர்கள் ஆரம்பிக்க வேண்டி இருக்கும். இணைப்பும் நடக்காமல் தமிழர்களுக்கான ஆட்சி அதிகாரமும் உறுதிப்படுத்தப்படாமல் இருக்கும் நிலையில் இணைப்பை காரிய சித்தியாக்குவதற்கு குதிரைக்கு முன் கொள்ளைக் கட்டி ஓட வைப்பதுபோல முதலாவது முதலமைச்சர் பதவியைக் காட்டி முஸ்லிம்களிடம் நப்பாசையை வளர்த்து விடுவதன் மூலம் தானா வடகிழக்கு இணைப்புக்கு கிழக்கு முஸ்லிம்களை வாக்களிக்க வைக்க முடியும் என்று சம்பந்தன் நம்புகிறார்? நீதி நியாயத்தின் சமத்துவம், சகோதரத்துவத்தின் அடிப்படையில் வடகிழக்கு இணைப்புக்கு கிழக்கு முஸ்லிம்கள் வாக்களிப்பதற்கான சூழலை உருவாக்குவது பற்றி அவர் யோசிக்கவில்லையா?

1956ல் தமிழரசுக் கட்சியின் நான்காவது மாநாட்டில் இணைந்த வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு ஒரு சுயாட்சி தமிழரசும், முஸ்லிம்களுக்கு ஒரு சுயாட்சி முஸ்லிம் அரசும் என்று தீர்மானித்து அதை பிரசித்தி பெற்ற திருமலைத் தீர்மானம் என்று வர்ணித்து பகிரங்கப்படுத்தி பிரபல்யப் படுத்தினார்களே.

அந்த சுயாட்சி தமிழலகுக்கும், சுயாட்சி முஸ்லிம் அலகுக்குமான ஆலோசனைகளை தமது தீர்வு வரைபில் சம்பந்தன் ஐயாவோ விக்னேஸ்வரனோ முன்வைக்க வில்லையே? அதனால் அவர்களை எப்படி நம்புவது?

1961ல் தமிழரசுக் கட்சியின் 9வது மாநாட்டில் தந்தை செல்வநாயகம் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமான சம ஆட்சி அலகைத்தானே மீள் உறுதி செய்தார். தந்தை செல்வநாயகத்தின் அபிலாசைகளை கௌரவித்தா வது தமிழர் தரப்பில் தமது தீர்வுப் பொதியில் வடகிழக்கு தமிழர்களுக்கு ஒரு சமஷ்டி ஆட்சியும், வடகிழக்கு முஸ்லிம்களுக்கு ஒரு சமஷ்டி ஆட்சியும் என்று சம்பந்தனோ, விக்னேஸ்வரனோ முன்மொழியாமல் போனதன் மர்மம்

என்ன? அந்த சம்பந்தனையும் விக்கியையும் முஸ்லிம்கள் எப்படி நம்புவது?

1977ல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் "முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்து வரும் பிரதேசங்களில் ஒரு சுயாட்சிமுறை ஏற்படுத்தப்படும். தமது விருப்பத்தின் பேரில் பிரிந்து செல்லும் அடிப்படையில் அவர்களுடைய சுயாதீனத்தை பாதுகாப்பதற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி உத்தரவாதம் அளிக்கிறது". என்று சொல்லியிருக்கிறது. அந்த உத்தரவாதத்தை சம்பந்தனோ விக்கியோ நிறைவேற்ற முயற்சிக்காமல் போனது ஏன்?

தமது தீர்வுப்பொதியில் ஆட்சி அதிகாரம் தொடர்பான தமது கோரிக்கையை ஒத்த கோரிக்கையைத் தானே வ/கி முஸ்லிம்கள் தொடர்பாகவும் அவர்கள் முன்வைத்திருக்க வேண்டும். சம்பந்தனோ விக்கியோ அப்படிச் செய்யவில்லை. அவர்களை முஸ்லிம்கள் எப்படி நம்புவது? இணைந்த வடகிழக்கில் தமிழர் களுக்கும், முஸ்லிம்களுக்கும் சமமான ஆட்சி என்று தந்தை செல்வா சொல்லி இருக்கிறார். ஆனால் வாப்பாக்கு மூத்த சம்பந்தன் ஒரு தவணைக்கு தமிழர் சமஷ்டிக்கு ஒரு முஸ்லிமுக்கு முதலாவது முதலமைச்சர் பதவி தரப்போகிறார். எந்த ஆதாரத்தின் பேரில், என்ன உத்தரவாத்தின் பேரில், வடகிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் ஆதரவளிக்க வேண்டும்?

ஆனால் கிழக்கைப் பிரிக்கும் விடயத்தில் முஸ்லிம்கள் '85க்குப் பிறகு அனுபவித்த கொடுமைகள் இன்னும் உயிர்வாழ்கின்றன. யாரும் எதுவும் சொல்லாமலேயே பிரிவுக்கு வாக்களித்து தமது ஈறலை நிவர்த்தித்துக் கொள்ள கிழக்கு முஸ்லிம்கள் சமயம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

புலிகளைவிட மோசமான தற்காலத்து தமிழ்த் தலைவர்களிடம் மொத்த வடக்கு கிழக்கின் ஆட்சி அதிகாரத்தை தம்மை மறந்த நிலையிலும், கனவிலும் கொடுத்துவிடக்கூடாது என்பதில் கிழக்கு முஸ்லிம்கள் ஒரு ஊமை வைராக்கியத்திலேயே இருக்கிறார்கள்.

வடகிழக்கு முஸ்லிம் தலைவர்கள் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு தமது அயராத பிரசாரங்களால் மாத்திரமே கிழக்கு முஸ்லிம்கள் மனதில் வைரம் பாய்ந்து போயுள்ள தமிழருக்கான ரௌத்திரத்தை மாற்ற முடியும். அதனால் வடக்கு கிழக்கு முஸ்லிம்களை தம்மோடு இணைத்துக் கொள்ளுவதற்கு தமிழரசுக் கட்சியின், தந்தை செல்வாவின், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சத்திய வாக்குறுதிகள் உத்தரவாதங்களுக்கமைய வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சமத்துவ அடிப்படையில் சமமான ஆட்சி அதிகாரங்களுக்

கான எற்பாடுகளை இரு திறத்தாரும் தனித்தும், கூட்டாயும் தத்தம் தீர்வுப் பொதிகளில் முன்வைப்பதைத் தவிர வேறு பொருத்தமான சுலபமான வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

அவ்வாறு கிழக்கின் 38% க்கும் சற்று அதிகமான, அதாவது கிழக்கில் தமிழர்களையும் விட இப்போது சற்று அதிகமாகவுள்ள முஸ்லிம்களை இணைப்புக்கு ஆதரவாக மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றில் வாக்களிக்கச் செய்தால் சுமார் 76% வாக்குகள் இணைப்புக்கு ஆதரவாகக் கிடைக்கும். கிழக்கில் முக்கால் வாசிக்கும் அதிகமான மக்களின் (மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு) தீர்ப்பு இணைப்பாக இருக்குமானால் இந்த அரசாங்கம் இணைப்பை சட்டபூர்வமாக்க வேண்டி வரும், முழு உலகமும் கவனித்துக் கொண்டிருக்கின்றதனால்.

எனவே வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் முழு ஆதரவையும் தெரிவிப்பதனைக் கொண்டு வடக்கு கிழக்கின் இணைப்பை உறுதிப்படுத்த முடியும். இதனை வெற்றிகரமாக்குவதற்கு, அதாவது கிழக்கு முஸ்லிம்களின் ஆதரவைப் பெறுவதற்கு வடக்கு கிழக்கில் தமிழர்களுக்குச் சொந்தமான ஒரு இஞ்சு நிலத்தையும் முஸ்லிம்களுக்கு தரவேண்டிய அவசியமே இல்லை.

வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்கள் அனைத்தும் முஸ்லிம் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்பது தான் முஸ்லிம்களின் அபிலாசை. முஸ்லிம்களின் பிரதேசங்களை முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவருவதில் தமிழர்களுக்கு எந்த ஆட்சேபனையும் இருக்க முடியாது என்பது மட்டு மல்லாமல், வடமாகாண சபையின் தீர்வு வரைபில் அந்த பிரதேசங்களை இணைத்து முஸ்லிம் தன்னாட்சி பிராந்திய சபை உருவாகும் என சி.வி. விக்னேஸ்வரன் ஐயாவும் வடமாகாணசபைத் தீர்வுத் திட்டத்தில் சொல்லியிருக்கிறார். இந்த முஸ்லிம் தன்னாட்சிப் பிராந்தியசபை முழு வடக்கு கிழக்கிலுமுள்ள முஸ்லிம் பிரதேசங்களை ஒன்றிணைத்தது தான்.

வடக்கு கிழக்கு ஒன்றிணைத்தலின்போது தான் இந்த முஸ்லிம் தன்னாட்சிப் பிராந்திய சபை உருவாகும் என்று வடமாகாண சபையின் தீர்வுத்திட்டம் சொல்லுகிறது. வடக்கு கிழக்கு இணைக்கப்படாவிட்டால் முஸ்லிம்களுக்கான தன்னாட்சிப் பிராந்திய சபை இல்லாமல் போவது பற்றி முஸ்லிம்கள் கவலைப் படுவதற்கு ஏதும் இல்லை. ஏனெனில் முஸ்லிம் தன்னாட்சிப் பிராந்திய சபைக்கான கோரிக்கையை எந்த முஸ்லிமும் முன்வைக்க வில்லை.

அரசியல் தீர்வு மற்றும் அரசியல் அமைப்பு முன்மொழிவுகளைக் கொண்ட வடமாகாணசபை தயாரித்துள்ள ஆவணத்தில்,

"இத்தீவிலுள்ள தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் முகமாக அவர்களின் கருத்துகளை அரசியல் தீர்வுக்கான ஆவணமொன்றின் உருவாக்கத்தில் பிரகடனப்படுத்துவது வடமாகாண சபைக்கு இன்றியமையாததாக உள்ளது."

என்று கூறியிருக்கிறது. எனினும் எந்த முஸ்லிம் கட்சியினதோ, அமைப்பினதோ அல்லது தனிப்பட்ட முஸ்லிம் முன்னோடி அரசியல் ஆர்வலர்களினதோ எந்தக் கருத்துகளையும் வட மாகாணசபை தேடவும் இல்லை, தெரிந்து கொள்ளவுமில்லை.

ஒன்றில், அது அவர்களுக்கு அவசியப்பட்டிருக்கவில்லை என்பது. மற்றையது அவர்கள் கூறும் தமிழ் பேசும் மக்கள் என்ற சொற்றொடரில் முஸ்லிம்கள் அடங்கவில்லை என்பது. தமிழ் பேசும் மக்கள் கூட்டத்திலிருந்து 1990ல் வடமாகாணத்தின் முஸ்லிம்களை விரட்டியடித் தவர்கள்தானே அவர்கள். அது எதுவாக இருந்தபோதும் முஸ்லிம்களை கலந்து கொள்ளாமல் வடமாகணசபை தனது மூப்புக்கு வழங்கியுள்ள அதிகார அலகுதான் முஸ்லிம் தன்னாட்சிப் பிராந்திய சபை.

இன்றுள்ள நிலையில், தமிழர்களின் மனோபாவத்தையும், போக்கையும் முஸ்லிம்கள் அறிந்து கொண்டுள்ள நிலையில், முஸ்லிம் தன்னாட்சிப் பிராந்திய சபையை அவர்கள் ஒருமித்த குரலில் நிராகரிக்கிறார்கள் என்பது விக்னேஸ்வரன் ஐயாவுக்கு இதனூடாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் வடக்கோடு கிழக்கு இணைக்கப்படா விட்டால் தனி வடமாகாணத்துக்கு மட்டும் சமஷ்டி ஆட்சி கிடைக்குமா? கிடைக்க சந்தர்ப்பம் இல்லை என்றே தோன்றுகிறது. பழையபடி மாகாணசபை மட்டத்திலான அதிகாரம்தான் வடக்குக்கும் கிழக்குக்கும் தனித்தனியாக கிடைக்கும். சில அதிகாரங்கள் புதிதாக அதிகரிக்கப்பட்ட மாகாணசபைதான் அதிகாரப் பரவலாக்கத்திற்கான அலகாக இருக்கும். சமஷ்டி அல்ல. வடக்குக்கு ஒன்று கிழக்குக்கு ஒன்று தமிழர்கள் போராட்டத்தில் அற்ப முன்னேற்றமே கிடைக்கும்.

தமிழர்களுக்கு வடக்கோடு கிழக்கு இணைக்கப்படுவதன் மூலம் சமஷ்டி ஆட்சியை உறுதிப்படுத்த முடியுமானால், அந்த இணைப்பையும் உயர்ந்த ஆட்சியையும் தமிழர்கள் பெற்றுக் கொள்ளுவதை கிழக்கு முஸ்லிம்களின்

வாக்குகள்தான் இயலுமாக்கப்போகிறது என்றால் கிழக்கு முஸ்லிம்களுக்கு அதனால் அதில் என்ன நன்மை கிடைக்கப்போகிறது? வடக்கு கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களை இணைத்த தன்னாட்சி பிராந்திய சபையா? வடக்கு கிழக்கு முஸ்லிம்களை இணைத்த பிராந்தியத்தில் என்ன ஆட்சி வேண்டும் என்பதை தீர்மானிக்கும் முன்னுரிமை முஸ்லிம்களுக்குத் தானே உண்டு. அவர்கள் தானே இணைப்பையும் ஊர்ஜிதப்படுத்தி, தமிழர்களுக்கான சமஷ்டி ஆட்சிக்கும் வழியைத் திறந்து வைக்கப்போகிறவர்கள். அதனால் அவர்களுக்கென்று அறிவிக்கப்பட்டுள்ள தன்னாட்சிப் பிராந்திய சபைக்குப் பதிலாக அவர்களும் சமஷ்டி ஆட்சியைக் கோரினால் அதில் தமிழர்களுக்கு என்ன நஷ்டம் வரப்போகிறது. பேராசை பெருந் தரித்திரத்திலேயே முடியும்.

முஸ்லிம்களால் இணைக்கப்படப் போகும் வடகிழக்கில் முஸ்லிம்கள் தம் பிராந்தியத் தில் சமஷ்டி ஆட்சி கோருவதில் என்ன தவறு இருக்கிறது? இதில் தமிழர்கள் தடுமாறுவதற்கு என்ன இருக்கிறது? அவர்களுக்குத் தேவைப்பட்டதை அவர்கள் பெற்றுக் கொள்ளுவதை இயலுமாக்கும் முஸ்லிம்களுக்கு தமக்குத் தேவைப் பட்டதை தாம் பெற்றுக் கொள்ளுவதில் தமிழர்கள் தயங்குவதற்கு தமிழர்களுக்கு என்ன காரணமும் நியாயமும் இருக்கின்றன? நியாயத்தின் அடிப்படையில் எதுவுமே இல்லை. தமக்குத் தேவைப்பட்ட இணைப்பை நனவாக்கி, தாம் இஷ்டப்பட்ட சமஷ்டி ஆட்சியையும் அல்லது அதற்கு முதற்படியான அதிகரித்த ஆட்சி அதிகார அலகையும், தாம் பெற்றுக் கொள்ள காரணமாய் இருக்கப்போகிறவர்கள் முஸ்லிம்கள், அந்த முஸ்லிம் களே ஒன்றிணைத்து கொடுக்கப்போகும் வடகிழக்கில் அவர்களை கீழான நிலையிலும், தமிழர்களை மேலான நிலையிலும் வைத்திருக்க தமிழர்கள் எண்ணுவதில் மேனி கூசவில்லையா? உரிமைப் போராட்டத்துக்குரிய குணாம்சங்களில் இதுவும் உள்ளதா?

எனவே வடக்கு கிழக்கு இணைப்பை முஸ்லிம்களைக் கொண்டு சாதிக்க வேண்டுமென்றிருந்தால். இணைக்கப்பட்ட வடகிழக்கில் தமிழர்களுக்கு ஒரு சமஷ்டி ஆட்சியும், முஸ்லிம்களுக்ன்று இன்னொரு சமஷ்டி ஆட்சியும் ஏற்கப்பட வேண்டும். இரு தரப்பாரும் இணைந்து பேசி இப்போராட்டத்தை வெல்ல வேண்டும். இதற்கு வடக்குத் தமிழர்கள் தயாரில்லை என்றால் கிழக்குத் தமிழர்களின் எதிர்கால நன்மைகளை வடமாகாணம் குழிதோண்டிப் புதைப்பதாகவே முடியும்.

முஸ்லிம் கட்சிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி இரு சமூகங்களும் முன்னேற்ற மடைவதற்கான வழிகளை உடனடியாக தமிழர்கள் ஆலோசிக்க வேண்டும்.

கிழக்கு மாகாண தமிழர்கள் வட மாகாணத்தவருடன் தாம் எதிர்நோக்க சாத்தியமான பிரச்சினைகளை இட்டு மனந்திறந்து பேசவேண்டும்.

கிழக்கு முஸ்லிம்கள் எதற்கும் தயார்! எந்தப் பக்கம் என்பதை தமிழர்களே தீர்மானிக்கட்டும் என்று விட்டிருக்கிறார்கள். இருந்து பார்ப்போம்.

- இன்ஷா அல்லாஹ் -

அல்லாஹ் நாடினால்

பணிவன்புடன்,
நூலாசிரியர்

புறவுரை

## செய்யிறத செஞ்சிக்குங்க

2016 ஜனவரியில் நல்லாட்சி அமைச்சரவையினால் புதிய அரசியல் அமைப்பு தொடர்பாக பொது பிரதிநிதித்துவக்குழு நியமிக்கப்பட்டது. இந்தக்குழு 25 நிர்வாக மாவட்டங்களிலும் பொதுமக்களுடனான கலந்துரையாடல்களை செய்ததுடன் பெருந்தொகையான எழுத்துமூல ஆலோசனைகளையும் பெற்று ஆராய்ந்து ஒரு இடைக்கால அறிக்கையை தயாரித்துள்ளது.

இந்த அறிக்கையை முழுப் பாராளுமன்ற 225 உறுப்பினர்களையும் உள்ளடக்கியதான அரசியல் அமைப்பு சபைக்கும், 21 அங்கத்தவர்களைக் கொண்ட முன்னெடுப்புக் குழுவுக்கும் உபகுழுக்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இந்த அறிக்கையில் ஏனைய பல முக்கிய விடயங்களோடு, மத்திய - மாகாண உறவுகள் தொடர்பான சிபார்சுகளும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆலோசனைகளும் காணக்கிடக்கின்றன.

அந்த அறிக்கையின் பிரகாரம் அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையான அலகு மாகாணமாகவே இருக்க வேண்டும் என்பதாகும். பல அரசியல் கட்சிகள் பொதுவாக மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட அலகிற்கான பிரேரணைகளையே முற்படுத்தி இருப்பதாகவும் அதனையே முன்னெடுப்புக்குழு ஏற்றிருப்பதாகவும் தெரிகிறது.

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பான ஏற்பாடுகள் முன்னெடுப்புக் குழுவால் மேலும் ஆராயப்படுமென சொல்லப்பட்டுள்ளது.

அத்தோடு இரண்டு அல்லது மேற்பட்ட மாகாணங்கள் ஒரே அலகாக உருவாக்கப்படுவது தொடர்பான இப்போது உள்ள அரசியல் அமைப்பின் ஏற்பாடுகள் (A-154-A-3) வைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதில் சம்பந்தப்பட்ட மாகாணங்களில் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்கான தேவைப்பாடும் மேலதிக ஏற்பாடாக இருக்க வேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் புதிய அரசியல் அமைப்பு ஏற்பாடுகள் ஒற்றை ஆட்சியின் கீழ் மாகாணங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்கும் பேச்சுவார்த்தைகளை உள்ளடக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசியல் அமைப்பில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரு தனி மாகாணமாக கணிக்கப்பட வேண்டுமென பிரேரித்துள்ளது.

இதனால் தான் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான கௌரவ இரா. சம்பந்தன் வடக்கு கிழக்கு இணைப்புக்கு வடகிழக்கு முஸ்லிம்கள் அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று வேண்டியுள்ளார்.

அவ்வாறு முஸ்லிம்கள் வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஆதரவு அளிக்கும் பட்சத்தில் அவ்வாறு இணைக்கப்படும் மாநிலத்திற்கு வழங்கப்படும் அதிகார அலகிற்கு ஒரு தகுதி வாய்ந்த முஸ்லிமை முதலாவது முதல் அமைச்சராக்க தான் தயாராக இருப்பதாகவும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளார்.

மேற்கூறப்பட்ட அவரது கருத்துகளில் இருந்து அவர் வட-கிழக்கு முஸ்லிம்களுக்கு தெரிவித்துள்ள

செய்திகள்: -

1. வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டு ஒரு தமிழ்மொழி மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்பதுவும்
2. அந்த மாநிலத்தின் ஆட்சி, அதிகாரம் தமிழர்களுடையதாக இருக்கும் என்பதுவும்
3. அதன் முதலாவது முதலமைச்சராக வடக்கு கிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் ஆதரிக்கும் பட்சத்தில் ஒரு முஸ்லிமை நியமிப்பது என்பதுவும்
4. மேற்சொன்றவற்றின் காரணத்தால் வட-கிழக்கு முஸ்லிம்களுக்கு எதுவித தனித்த, பிரத்தியேக ஆட்சி அதிகாரமும் வழங்கப்படமாட்டாது என்பதுவும் ஆகும்.

இதன்மூலம் வடக்கு கிழக்கில் முஸ்லிம்களுக்கென தனியான எந்தவித ஆட்சி அதிகாரமும் கிடையாது என அல்லது கொடுக்கத்தேவையில்லை என்றும், முஸ்லிம்களுடைய அரசியல் தனித்துவமும், பிரத்தியேக அபிலாஷைகளும் கருத்துகெடுக்க அவசியமற்றவை என்றும் அவர் கருதியுள்ளது தெரிகிறது.

இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கிற்கு என்ன விதமான ஆட்சிமுறை அவசியப்படுமென்பதை அவர் தெளிவாக்கவில்லை. அது சமஷ்டி ஆட்சியாக இருக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு இருப்பதாக தெரியவுமில்லை. ஏனெனில் வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டு அந்த மாநிலத்திற்கு சமஷ்டி அதிகாரமும் வழங்கும் நிலையில், தள்ளம்பாறிக்கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்தால் ஒருபோதும் முடியப்போவதில்லை. அதற்கு, இந்த இருதலை நல்லாட்சி ஒருபோதும் இணங்கப்போவதில்லை என்பது தெரிகிறது. மேலும் ஒற்றை ஆட்சியின் கீழ் மாகாணங்களுக்கு அதிகாரங்களை அதிகரிக்கும் யோசனை தான் அரசாங்கத்திற்கு இருப்பதாக தெரிகிறது.

அதனால் சமஷ்டி ஆட்சிக்குப் பதிலாக மாகாண சபைகளுக்கு இப்போதுள்ள அரசியலமைப்பில் வாக்களிக்கப்பட்டும், இதுவரை வழங்கப்படாதும் இருக்கின்ற அதிகாரங்களை மட்டுப்படுத்திக் கொடுத்து மாகாண சபைகளையே வழங்கக் கூடிய சாத்தியம்தான் அதிகம் உண்டு.

ஆயினும் சமஷ்டி ஆட்சிக் கோரிக்கையினை நிறைவேற்ற முடியாமல் போகும் தன்னுடைய இயலாமைக்காக இரட்டைத்தலை நல்லாட்சி அரசாங்கம் அதற்குப் பதிலாக வடக்கு கிழக்கை இணைத்துக் கொடுக்க முன்வரக்கூடும். அதற்கு சர்வதேச, இந்திய, புலம் பெயர்ந்தோர் அழுத்தங்களும் அத்தோடு ஆட்சி மாற்றத்தை உறுதிப்படுத்த தமிழர் சமூகம் அளித்த அமோகமான ஆதரவும் காரணங்களாய் இருக்கும்.

அவையெல்லாம் ஒருபுறமிருக்க சம்பந்தன் ஐயாவிடம் அவர் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற ரீதியில் சில தெளிவுகளை பெற வேண்டியுள்ளது.

1956ல் திருமலையில் நடந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் 4வது மாநாட்டின்போது மேடையிலிருந்த முஸ்லிம் உறுப்பினர்களின் கேள்வியை அங்கீகரித்து அதுவரை இணைந்த வடக்கு கிழக்கில் ஒரு சுயாட்சி தமிழரசு மாத்திரமே உருவாக வேண்டும் என்றிருந்த நாலு அம்சக் கோரிக்கையில் சுயாட்சி முஸ்லிம் அரசும் உருவாக்கப்பட வேண்டும் என்ற திருத்தம் கொண்டுவரப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

அதாவது இணைந்த வட-கிழக்கில் தமிழர்களுக்கு ஒரு சுயாட்சி அரசும், முஸ்லிம்களுக்கு இன்னொரு சுயாட்சி அரசும் உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் அந்தத் தீர்மானமாக இருந்தது. அதனாலேயே அது பிரசித்தி

பெற்ற திருலைத் தீர்மானம் என்று புகழப்பட்டது.

அப்போது சம்பந்தன் ஐயாவும் தமிழரசின் உறுப்பினாராக இருந்திருப்பார். அன்று 1956இல் தமிழரசுக் கட்சி எடுத்த அந்த தீர்மானம் பற்றி இப்போது அவர் நினைத்தே பார்ப்பதில்லையா? அதனால்தான் இணைந்த வட-கிழக்கில் தமிழர்களுக்கு மாத்திரம் ஒரு ஆட்சி அதிகாரத்தை அவர் கோருகிறாரா? அப்படி நடந்தால் தமிழருக்கு மாத்திரமான அந்த ஆட்சி அதிகார சபையின் முதலாவது முதலமைச்சராக ஒரு முஸ்லிமை நியமிக்கத்தயார் என்று கூறியிருக்கிறாரா?

அப்படியானால் தழிழரசுக்கட்சி தனது 4வது மாநாட்டில் முஸ்லிம்களுக்கும் சுயாட்சி என்று முஸ்லிம்களுக்கு அளித்த வாக்குறுதியை சம்பந்தன் ஐயா வேண்டுமென்றே மீறியுள்ளாரா? அல்லது அது பற்றி அவருக்குத் தெரியாதா?

தமிழ்பேசும் மக்கள் கோரும் சுயநிர்ணய உரிமை அவர்களின் ஓர் அங்கமான முஸ்லிம் மக்களுக்கும் உண்டு என்ற உன்னத சனநாயக தத்துவத்தின் அடிப்படையிலேயே இம்முடிவை எடுத்ததாக 1956இல் 4வது மாநாட்டில் தமிழரசுக் கட்சி உறுதிப்படுத்தியது.

சம்பந்தன் ஐயாவுக்கு தமிழரசுக் கட்சியின் உன்னத சனநாயக தத்துவம் பற்றி எதுவும் தெரியாதா? அல்லது அவர் வடகிழக்கு முஸ்லிம்களை தமிழ்பேசும் மக்களின் ஓர் அங்கமாக கருதவில்லையா? அதனால் தான் 1990 ஒக்டோபர் இறுதியில் வடமாகாண முஸ்லிம்கள் அனைவரையும் முழு வடமாகாணத்தை விட்டும் துரத்தி அடித்தார்களா?

வடக்கு கிழக்கில் தமிழ்பேசும் மக்களில் தமிழர் பெறப்போகும் ஒரு ஆட்சி அதிகாரத்துக்கு சமனான இன்னொரு ஆட்சி அதிகாரத்தை முஸ்லிம்களை பெறவிடக்கூடாது என்பதா சம்பந்தன் ஐயாவின் நிலைப்பாடு? தமிழருக்கான அந்த சுயாட்சியில் முதலாவது முதலமைச்சர் பதவியை ஒரு முஸ்லிமுக்குக் கொடுத்தால் முஸ்லிம்களுக்கு வட-கிழக்கில் சுயாட்சி கொடுத்த மாதிரி என்று சம்பந்தன் ஐயா நினைக்கிறாரா?

1948ல் அகில இலங்கை தமிழ் காங்கிஸ் எம்பிகளுக்கு அமைச்சர் பதவி தருவதாக அன்றைய பிரதமர் டீ.எஸ். சேயனநாயக்கா ஆசை வார்த்தை பேசியதற்கும், இன்று முஸ்லிம் ஒருத்தருக்கு முதலாவது முதலமைச்சர் பதவியை தரப்போவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா தூபமிடும் ஆசைவார்த்தைக்குமிடையில் என்ன வேறுபாடு இருக்கிறது?

சிறுபான்மை சமூகங்களின் சில்லறைகளுக்கு பதவி ஆசை காட்டி வழிகெடுத்து அதன்மூலம் அவர்களது சமூகத்து நலன்களை அபகரிக்கும் கபட நாடகத்தைச் சேர்ந்ததா இதுவும்?

1956 என்பது 60 வருடங்களுக்கு முற்பட்ட விஷயம் என்பதனால் தமிழரசுக் கட்சியின் 4வது மாநாட்டு தீர்மானமும் வாக்குறுதியும் நினைவில் இல்லாத நிலையில் சம்பந்தன் ஐயாவால் எடுக்கப்பட்ட தீர்மானங்களாக இவை இருக்கக்கூடும் என்று மழுப்பலாமா?

அதேபோல 1961ல் தமிழரசுக் கட்சியின் 9வது மாநாட்டில் தந்தை செல்வநாயகம் வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சமமான ஆட்சி அதிகாரம் உருவாக்கப்பட வேண்டும் என பிரகடனித்தது கூட சம்பந்தன் ஐயாவிற்கு ஞாபகத்திற்கு வரவில்லையா? அதனால் தான் அவர் வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு மட்டுமான ஆட்சியை கூறுகிறாரா? இதில் பெரிய விசனத்துக்குரிய விசயம் என்னவென்றால் தமிழர்களுக்கு மட்டுமான இந்த ஆட்சியை அமைக்க வடக்கு கிழக்கை இணைத்துத்தர வேண்டும் என்று வடகிழக்கு முஸ்லிம்களை சம்பந்தன் ஐயா கோருவதுதான். இது 55 வருட காலத்திற்கு முற்பட்ட தீர்மானம் என்பதால் ஐயாவின் ஞாபகத்தில் அது உறைக்கவில்லை என்று சொல்லி சமாளிப்பதா?

அதுவும் போகட்டும்: 1977ன் பொதுத் தேர்தலுக்கான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் என்ன சொல்லுகின்றது என்று உற்றுப்பாருங்கள்.

“அரசியல் அதிகாரம் பன்முகப்படுத்தப்படுவதுடன் எந்தவொரு பிரதேசமோ அல்லது எந்தவொரு சமயமோ மற்றொரு பிரதேசத்தை அல்லது மற்றொரு சமயத்தை அடக்கி ஆள்வதற்கு வாய்ப்புக் கிடைக்காத விதத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் வாழ்ந்து வரும் மக்களுக்கென சுவிற்சர்லாந்தில் உள்ளது போல ஒரு சமஷ்டி ஆட்சிமுறை நிறுவப்படும்”

குறிப்பாக தமிழீழ அரசில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினாராக வாழ்ந்து வரும் பிரதேசங்களில் ஒரு சுயாட்சிமுறை ஏற்படுத்தப்படும்.

தமது விருப்பத்தின்பேரில் பிரிந்து செல்லும் அடிப்படையில் அவர்களுடைய சுயாதீனத்தை பாதுகாப்பதற்கும் தமிழர் விடுதலைக்கூட்டணி உத்தரவாதம் அளிக்கிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணி மேலே சொல்லியுள்ளவற்றையும் முஸ்லிம்களுக்கு அளித்துள்ள உத்தர வாதத்தையும் சம்பந்தன் ஐயா இதுகாலவரையில் எள்ளளவாவது அறிந்திருக்கவில்லையா? அல்லது அவை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் தமாஷ் என்று நினைக்கிறாரா?

தமிழர் தேசியத்தின் பரிணாம வளர்ச்சியின் முக்கிய கால கட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள், விடுக்கப்பட்ட உத்தரவாதங்கள் பற்றிய எதுவும் தெரியாமலா சம்பந்தன் ஐயா தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தலைவராக இருக்கிறார்? அவரின் பேச்சுக்கும், போக்குக்கும், தமிழ் தேசியத்தை தாங்கிக் கொண்டிருக்கும் பிரதான போராளிகளும் உடந்தையா? முஸ்லிம் கட்சிகள் தேவலாம் போல் இருக்கிறது.

முஸ்லிம்கள் வடகிழக்குக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்றால் தமிழரசுக் கட்சியின் 4வதும் 9வதும் மாநாட்டு முஸ்லிம்கள் தொடர்பான தீர்மானங்களையும் வாக்குறுதிகளையும் அத்தோடு தமிழர் விடுதலைக் கூட்டணியின் உத்தரவாதத்தையும் நடைமுறைப்படுத்த சம்பந்தன் ஐயாவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தயார்தானா? அப்படியில்லையென்றால் தமிழர்களின் கட்சிகளை முஸ்லிம்கள் அறவே நம்பத்தேவையில்லை என்று சம்பந்தன் ஐயா சொல்லுகிறாரா? சம்பந்தன் ஐயாவின் முதலாவது முதலமைச்சர் புஷ்வாணமும் அவ்வாறு உள்ளது தானா? இலங்கை தமிழரசுக் கட்சியின் வாக்குறுதிகள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உத்தரவாதங்கள் இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பதவிப்பிரமாண பசப்பு வார்த்தைகள் எல்லாம் நூல் அறுந்த பட்டங்கள் தானா? எப்படி தமிழ்த் தேசியத்தை முஸ்லிம்கள் நம்புவது என்று சம்பந்தன் ஐயா சொல்ல வேண்டும்?

தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றாக, அன்னியோன்யமாக, நகமும் சதையும்போல, இரட்டைக்குழந்தைகள் போல இருந்த காலத்திலேயே, முஸ்லிம்களுக்குத் தேவைப்பட்டிராதபோதும், முஸ்லிம்களுக்கான சுயாட்சி அதிகாரத்தை அங்கீகரித்தவர்கள் அன்றையத் தமிழர்கள்.

ஆனால் இன்று வடமாகாண முஸ்லிம்கள் அனைவரையும் அவர்கள் தமிழ் தாயகத்திலிருந்து, பாரம் பரிய வாழிடங்களிலிருந்து துப்பாக்கி வேட்டு முழக்கத்தில், இனச்சுத்திகரிப்பு என்ற பெயரில் 1990 ஒக்டோபர் இறுதியில் முழு வடமாகாணத்தை விட்டும் துரத்தியடித்துவிட்டு அவர்களின் கால்வாசிப் பேராவது இன்னும் தமது பாரம்பரிய வாழிடங்களுக்கு மீள்குடியேற வழியில்லாமல் தவித்து தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில்

வடகிழக்கு இணைப்புக்கான அவர்களுடைய ஆதரவை பகிரங்கமாகக் கேட்பதற்கு சொட்டாவது வெட்கப்படவில்லையா?

கிழக்கு மாகாணத்தில் 1985இல் இருந்து 1500க்கும் அதிகமான முஸ்லிம்கள் தமிழ் ஆயுதக் கும்பல்களால் இனப்படுகொலை செய்யப்பட்டதையும், 600க்கும் மேற்பட்ட முஸ்லிம் பொலிஸ்காரர்கள் சுற்றி வளைக்கப்பட்டு சிறைப்பிடிக்கப் பட்டு தமது பிரேதக் குழிகளை தாமே தோண்டுமாறு பணிக்கப்பட்டு உயிரோடு அவர்கள் புதைக்கப்பட்டதையும், 60,000க்கும் அதிகமான முஸ்லிம்கள் கிழக்கில் காலத்திற்குக் காலம் தற்காலிக அதிகளாக்கப்பட்டதையும், முஸ்லிம்களுடைய 60,000க்கு மேலான ஏக்கர் காணி நிலங்கள் கவரப்பட்டு இன்றுவரை திருப்பிக் கொடுக்கப்படாமல் வைத்திருப்பதையும், எப்படி இலகுவில் மறந்துவிட முடியும்? தமிழர்களுக்கு வடகிழக்கில் தனித்த ஆட்சி அதிகாரத்தை கொடுப்பதற்காக வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று சம்பந்தன் ஐயா கேட்கிறார் என்றால் தமிழர்கள் அவருடைய ஓய்வு காலத்தைப் பற்றி உடனடியாக தீர்மானிக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் ஆதரவளிக்க வேண்டுமாக இருந்தால் இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கின் தமிழ் பிரதேசங்களை இணைத்து தமிழருக்கான ஒரு சுயாட்சியும், முஸ்லிம் பிரதேசங்களை இணைத்து முஸ்லிம் களுக்கான ஒரு சுயாட்சியும் உருவாக்கப்படுவதை இரு திறத்தவர்களும் தனித்தும் ஒன்றித்தும் உத்தரவாதப்படுத்த வேண்டும்.

அது தவறுமாக இருந்தால், வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டார்கள் என்பதோடு, அத்தோடு நின்று விடவும் மாட்டார்கள் என்பதையும் ஐயாவுக்கு சூசகமாக சொல்ல வேண்டியது அவசியமாகி உள்ளது.

வட கிழக்கின் நிரந்தர அமைதி பாதுகாப்புக்கு வடகிழக்குத் தமிழ் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் சம அந்தஸ்தில் அமர்ந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும். விவேகத்தோடும், விட்டுக் கொடுப்புகளோடும் பொதுவான தீர்மானங்களை அடைய வேண்டும்.

ஆயினும் வடமாகாண சபை தீர்மானித்துள்ளது போல தமிழர்களுக்கு சமஷ்டி ஆட்சியும், முஸ்லிம்களுக்கு தன்னாட்சிப் பிராந்திய சபையும் என்ற ஏற்பாடுகள் ஒருபோதும் சரிவரமாட்டாது என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அது தமிழரசுக் கட்சியினதும் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் வாக்குறுதிகளுக்கும் உத்தரவாதத்திற்கும்

மாற்றமானதாகும் என்பதுடன் முஸ்லிம்களை கீழான நிலையில் வைத்திருப் பதற்கே வழிவகுக்கும்.

சுடர் ஒளி 29.09.2016ல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் பா.உ. புதிய குண்டு ஒன்றைப் போட்டு பெரும் புரளியைக் கிளப்பியுள்ளார் மு.கா.வின் மறைந்த தலைவர் அஷ்ரபுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையில் எழுத்து மூலமாக ஏற்கப்பட்ட ஒப்புதல்கள் உண்டு என்று அவர் கூறியுள்ளார். அந்த ஏற்பாடு என்னவென்பது பற்றி அவரோ அல்லது முஸ்லிம் காங்கிரஸோ இதுவரையில் எதையும் வெளிப்படுத்த வில்லை.

வடக்கையும் கிழக்கையும் இணைத்து தமக்கு வேண்டிய அதிகாரசபையை தமிழர்கள் பெற்றுக்கொள்ளட்டும். முஸ்லிம்களுக்கு தஹறாக் கட்டையும் சோழியும் போதுமென்றா அஷ்ரப் ஏற்றுக்கொண்டிருந்தார்? றஊப் ஹக்கீம் தான் அது பற்றிச் சொல்ல வேண்டும்.

ஆட்சி மாற்றத்திற்கு இந்த நாட்டின் முதலாவது சிறுபான்மை சமுகமான தமிழர்கள் அமோக ஆதரவு அளித்தனர். இந்த ஆதரவு தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான ஒரு இணக்கமான தீர்வை பெறும் நோக்கத்துடனே பேச்சு வார்த்தைகளின் மூலம் வழங்கப்பட்டது. தமிழ் தேசியத்தின் அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வு வரைபுகள் இந்த புதிய அரசியல் அமைப்பிற்கான ஆலோசனைகளுக்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும் இந்த ஆட்சி மாற்றத்தை முஸ்லிம் சமுகத்தினதும், முஸ்லிம்களின் கட்சிகளான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அதிரடி ஆதரவு மாற்றத்தாலும் அதனைப் பின்பற்றிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினது ஆதரவினாலுமே உறுதிப்படுத்த முடிந்தது என்பதல்லவா உண்மை.

முஸ்லிம் காங்கிரஸ் தபால் மூல வாக்களிப்பின் போது மஹிந்த ஆட்சிக்கு சார்பாகவே செயற்பட்டிருந்த போதும் இறுதிக்கட்டத்தில் வேறுசில ஏற்பாடுகளுக்கு முன்னைய ஆட்சியுடன் இணக்கப்பாட்டுக்கு வரமுடியாது போனதனாலேயே முஸ்லிம் காங்கிரஸ் இறுதி நேரமாகப் பார்த்து மஹிந்தவுக் கான தனது ஆதரவை வாபஸ் வாங்கிக் கொண்டது.

மக்கள் காங்கிரசும், முஸ்லிம் காங்கிரசும் இந்த நாட்டின் இரண்டாவது சிறு பான்மை சமுகமான முஸ்லிம்களில் வடகிழக்கு முஸ்லிம்களின் இனப்

பிரச்சினை தொடர்பாகவோ அல்லது வடகிழக்கு முஸ்லிம் தேசியம் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக வடக்கில் முகம்கொடுத்து வந்த வக்கிரமான முஸ்லிம் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகவோ ஆட்சிக்கு வர இருந்த புதியவர்களுடன் எந்த பேச்சு வார்த்தைகளிலும் தேர்தலுக்குமுன் ஈடுபட்டிருக்க வில்லை.

முஸ்லிம்களின் மூன்றாவது கட்சியாகிய தேசிய காங்கிரஸுக்கு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த வெல்லக் கூடிய வாய்ப்பை உதாசீனம் செய்யமுடியாமல் போயிற்று. பொது பல சேன போன்ற சிங்கள இனத்துவேச அமைப்புகளின் தென்மேல் முஸ்லிம்கள் மீதான அத்துமீறல்களையும், அடாவடித்தனங்களை யும், கட்டுப்பாட்டுக்கள் கொண்டு வரும் யோசனை அதற்கு வலுப்பட்டிருந்தது. வடகிழக்கு முஸ்லிம்களின் தேசிய இனப்பிரச்சினையை தற்காலிகமாக ஒதுக்கி ஓரம்கட்டி வைத்துவிட்டு மஹிந்தவை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் தன்னை ஆக்கிக் கொண்டது. வடகிழக்கின் முஸ்லிம் கட்சிகள் இரண்டும் மாற்றுக் கட்சிக்கான ஆதரவை திடீரென வெளிப்படுத்திய போது தேசிய காங்கிரசும் அவ்வாறு மாற்றுக் கட்சிக்கு ஆதரவு தெரிவிக்க தானும் மாறியிருந்தால் அது சில சமயம் தென்மேல் முஸ்லிம்களுக்கு மேலும் ஆபத்தாக முடிந்திருக்கும் என்ற எண்ணமும் தேசிய காங்கிரசுக்கு இருந்தது. அதனால் புதிய ஆட்சி மாற்றத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தேசிய காங்கிரஸ் தள்ளப்பட்டிருந்தது. முஸ்லிம் தேசிய இனப் பிரச்சினைக்கான புதிய தீர்வு தேடும் விடயத்தில் அதனால் முழுமூச்சாக ஈடுபட முடியாமல் போனதற்கு அதுவே காரணமாயிற்று.

இவ்வாறு மூன்று காங்கிரஸ்களும் முஸ்லிம் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக புதிய ஆட்சியாளர்களோடு எதுவித பேச்சுவார்த்தைகளையும் முன்வைக்கவில்லை என்பது எல்லாரும் அறிந்த விடயமாகும். ஆதரவளித்த கட்சிகள் எவற்றை எதிர்பார்த்து ஆதரவளித்தனவோ அவற்றில் முஸ்லிம் தேசிய இனப்பிரச்சினை அடங்கவில்லை என்பது வருத்தத்துக்குரிய விடயமாகும்.

குறிப்பாக வடகிழக்குக்குரிய முஸ்லிம்களின் சுமார் 300,000 வாக்குகளும் புதிய ஆட்சிக்கு சார்பாக அளிக்கப்படாமல் இருந்திருக்குமானால், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க முடியாது என்பது உண்மையானதாகும்.

அவ்வாறு ஜனாதிபதித் தேர்தலின் தலையெழுத்தையே இறுதி நேரத்தில் மாற்றி அமைத்து வெற்றிக்கு வழிசமைத்த வடகிழக்கு முஸ்லிம்களின்

தேசிய இனப்பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வை பெற்றுத் தரவேண்டிய பெரும் பொறுப்பு மக்கள் காங்கிரஸுக்கும், முஸ்லிம் காங்கிரஸுக்குமே அதிகம் உண்டு.

இன்று, 25 வருடங்களுக்கு பிறகு, கால் நூற்றாண்டு கழிந்த நிலையிலும் முஸ்லிம் தேசியம் பற்றிய அறிவு வளர்க்கப்படாமலும், தேவை உணர்த்தப் படாமலும், முஸ்லிம்கள் வெறுமை சூழப்பட்டிருப்பதற்கு முஸ்லிம் கட்சிகளே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டி வரும். இந்த மூன்று கட்சிகளில் எந்தக் கட்சியும் முஸ்லிம் தேசியத்தை உருவாக்க வேண்டும் என இதுவரை கற்பனை கூட பண்ணியதாகவும் தெரியவில்லை. தவறுகள் எங்கும் நடப்பது சாதாரண விஷயம்தான். ஆனால் அது பற்றிய அறிவு வந்ததற்குப் பின்னரும் அதனை கிடப்பில் போட்டு அசமந்தமாக இருப்பது மகா தவறு என்பதை முஸ்லிம் கட்சிகள் உணர்ந்தாக வேண்டும்.

வடகிழக்கு முஸ்லிம்கள் ஒரு தேசியம் என்ற அடைமொழியைச் சேர்த்துக் கொள்ளாவிட்டால் அவர்கள் வெறுமனே அரசியல் தீர்வுக்கோ, அல்லது சுய நிர்ணய உரிமைகளுக்கு லாயக்கு அற்ற வெறும் மக்கள் குழுக்களாகவே இருப்பார்கள். அதனால் அவர்கள் வடமாகாண முஸ்லிம்கள், திருமலை முஸ்லிம்கள், மட்டு முஸ்லிம்கள், அம்பாரை முஸ்லிம்கள் என்று பல குழுக்களாக தம்மை பிரித்துக் கொள்ளாமல் வடக்கு கிழக்கு முஸ்லிம்களை ஒன்றிணைத்த ஒரே மக்கள் கூட்டமாக தம்மை அங்கீகரித்து அடையாளப் படுத்திக்கொள்ள வேண்டிய அத்தியாவசிய அவசரத்தில் இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் சிங்கள பௌத்த தேசியத்தை சேர்ந்தவர்கள் அல்ல. தமிழ்த் தேசியத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்று இனச் சுத்திகரிப்பின்பேரில் வடமாகாணத்துத் தமிழர்களால் ஒட்டு மொத்தமாக துப்பாக்கி முனையில் துரத்தியடிக்கப் பட்டதனால் முஸ்லிம்கள் தமிழ் தேசியத்தை சேர்ந்தவர்களும் அல்ல.

சிங்கள பௌத்த அரசுகளாலும் தமிழ்த்தேசியத்தாலும் காலத்துக்குக் காலம் முஸ்லிம் என்ற ஒரே காரணத்திற்காக இன ஒடுக்குதல்களுக்கு இலக்காக்கப் பட்டவர்கள் தான் முஸ்லிம்கள். அதனால் சர்வதேச சட்டத்தின் பிரகாரமும் பொது சர்வதேச சட்டத்தின் நியதிப்படியும் வடகிழக்கு முஸ்லிம் மக்கள் கூட்டம் ஒரு தனித்த தேசியம் ஆக அடையாளம் காணப்படுகிறது. அதனால் வடகிழக்கு முஸ்லிம்கள் வடகிழக்கு முஸ்லிம் தேசியமாக தரமுயர்த்தப் பட்டுள்ளார்கள். இப்போது அவர்கள் சுயநிர்ணய உரிமைகளுக்கு உரித்தான வர்களாகி விட்டார்கள். வடகிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களும், வடகிழக்கில்

இருந்து அகதிகளாக வெளியேற்றப்பட்டு சிங்களமொழி மாகாணங்களில் இன்னும் மீள்குடியேற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம்களும் அடங்கலாக உள்ள ஒரே அமைப்பு தான் முஸ்லிம் தேசியம் என்பதில் சந்தேகமில்லை.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழர்கள் அனைவரும் அடங்கலாக உள்ள ஒரு அமைப்பு தான் தமிழ்த் தேசியம் என்று அழைக்கப்படுகிறது. வடகிழக்கில் நாம் சிங்கள மக்களோடு கலந்து வாழவில்லை. அவர்களும் நம்மோடு கலந்து வாழும் எண்ணத்தோடு இல்லை. நாம் தமிழர்களோடுதான் ஒட்டி உறவாடி உரிமை கொண்டாடி வாழ்ந்து வந்தோம். தமிழ்மொழி நமக்கு அதிகம் சொந்தம் என்ற அளவில் பெருமிதத்தோடு தான் தமிழ்மொழியை நாம் நேசித்து வளர்த்து வந்தோம்.

ஆனால் தமிழர்கள் அப்படியான நினைவுகளோடு வாழவில்லை என்பது அவர்கள் கைகளிலேயே தாராளமாக சட்டபூர்வமற்ற ஆயுதங்கள் புழக்கத்திற்கு வரத்தொடங்கியதும் தான் தெரிய வந்தது. அவர்கள் தம்மை நமக்கு வேற்றுவராக ஆக்கிக் கொண்டார்கள். நம்மிலிருந்து வேறுபட்டு நின்றார்கள். நாம் முஸ்லிம்கள் என்றும் தமிழ்த் தேசியத்தில் அடங்காதவர்கள் என்றும் துப்பாக்கிகளால் சுட்டும் காட்டினார்கள். அந்தக் காயங்கள் இன்னும் ஆறவில்லை. அதன் வடுக்களிலிருந்து கசியமும் இரத்தமும், வலியும் வேதனையும் இன்னும் ஓயவில்லை.

ஆயுதங்கள் களையப்பட்டதும் அர்த்த ராத்திரியில் குடைபிடித்த அசம்பாவிதம் போய் மீண்டும் பழைய குருடி கதவைத் திறடி என்று இப்போது முஸ்லிம்களுடன் அன்னியோன்ய பாசமழை சொட்டிக் கொண்டு வரும்போது அவர்கள் அக்கிரமங்களை அவ்வளவு இலகுவில் மறக்க முடியவில்லை. அவர்களை ஆரத்தழுவி அவர்களுக்கு மாத்திரம் முழு வடகிழக்கையும் எழுதிக்கொடுத்து முஸ்லிம்கள் கைகட்டி சேவகம் செய்வார்கள் என்று எந்த நம்பிக்கையில் கற்பனை பண்ணுவது?

இப்போது முழு ஆட்சி அதிகாரமும் தமிழர்களுக்கு கொடுக்கப்பட்டு முஸ்லிம்கள் அதிகாரம் கிடைக்கப் பெறாத வெற்றுக் கையராய் ஆக்கப்படுவார்களேயானால், அந்த வாழ்க்கை முஸ்லிம்களுக்கு அடிமைகளின் நரகமாகவே இருக்கும். ஆட்சி அதிகாரம் இல்லா நிலையில் ஆயுதங்களைச் சேர்த்துக் கொண்டு நிராயுதபாணிகளாய் இருந்த அப்பாவி பொது முஸ்லிம்கள் மீது அடர்ந்தேறி, அத்துமீறி அட்டூழியங்கள் செய்த தமிழர்களுக்கு அதிகாரமும்

கிடைக்கப்பெற்று முஸ்லிம்கள் அதிகாரமற்ற வெற்றுக் கையராகவும் இருப்பார்களேயானால் சும்மா ஆடிய பேய்க்கு கொட்டு முழக்கம் அடித்த மாதிரிதான். வேறு வினையே வேண்டாம். அதனால் முஸ்லிம்கள் அனைவரும் ஒரு தேசியமாகப் பலப்பட்டு தமது சுயநிர்ணய உரிமைகளுக்கான தேவையை யும், தீர்வையும் பகிரங்கப்படுத்த புறப்பட்டே ஆக வேண்டும்.

வடக்கையும் கிழக்கையும் இணைத்து அரசாங்கம் எந்த விதமான ஆட்சி அதிகாரத்தையும் தமிழர்களுக்கு வழங்கப்போகிறது என்றாலும் அது தாராளமாக வழங்கட்டும். ஆனால் தமிழர்களுக்கான அந்த ஆட்சி அதிகாரம் வடக்கு கிழக்கில் தமிழர் பெரும்பான்மைப் பிரதேசங்களை இணைத்த ஒரு மாநிலத்தில் மட்டும் தான் அதிகாரம் செலுத்த முடியும்.

வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களை ஒன்றிணைத்த மாநிலத்தில் முஸ்லிம்களுக்கான தனித்த பிரத்தியேகமான ஆட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இதில் எந்த விட்டுக் கொடுப்புகளுக் குமே இடமிருக்கமாட்டாது. அத்தோடு தமிழ், முஸ்லிம் ஆட்சிகளுக்கிடையே வட கிழக்கின் அரச காணிகள் விகிதாசார அடிப்படையில் பங்கிடப்பட வேண்டும்.

முஸ்லிம்களை ஆள்வதற்கு இதற்குப் பின்னர் தமிழர்கள் முண்டு பிடிக்கத் தேவையில்லை. நம்மவர்களை நாமே ஆள்வதும், பிறரை அவர்களையே ஆளவைப்பதும்தானே அதி உச்ச ஜனநாயகமாக இருக்க முடியும். அது பற்றி தமிழர்களும் ஏன் நினைத்துப் பார்க்கக் கூடாது? எனவே முஸ்லிம் தேசியமும், தமிழ் தேசியமும் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய விடயங்கள் எத்தனையோ இருக்கின்றன. எல்லா விடயங்களும் நியாயத்தின் அடிப்படை யில் தீர்க்கப்படுவதில் யாரும் சலிக்கத் தேவையில்லை. வெறும் இனப்பிரியத் தின் பேராசையில் நியாயங்களின் சிறகுகளை முறிக்கத்தேவையில்லை.

இது தான் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வின் அத்திவாரமாகும். இந்தத் தீர்வுதான் வடகிழக்கு மொத்த முஸ்லிம்களுக்கும் என்றைக்கும் நன்மை பயக்கும் தீர்வாக அமையும். அது என்றைக்கென்றாலும் சரியே.

வடக்கு கிழக்கு ஆட்சி அதிகாரத்தை இரண்டாகப் பிரித்து முஸ்லிம்களுக்கும் சம ஆட்சி அதிகாரங்கள் வழங்க தமிழர்கள், குறிப்பாக வடக்குத் தமிழர் தாமாக விரும்புவார்கள் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை.

கிழக்குத் தமிழர்கள், கிழக்கு முஸ்லிம்களை பகிரங்கமாக ஒதுக்கி ஓரம்கட்ட துணியமாட்டார்கள்: அது அவர்களுக்கு புத்தி பூர்வமான, தூர திருஷ்டியிலான முடிவாக இருக்கவும் மாட்டாது என்பதனால்.

ஆதலால் முஸ்லிம் அரசியல் முன்னோடிகள் அனைவரும் ஒன்றிணைந்து முஸ்லிம் தேசியக் கூட்டமைப்புக்கான அங்குரார்ப்பண மாநாட்டை அதிவிரை வில் ஒழுங்கு செய்ய வேண்டும். முழு வடக்கு கிழக்கையும் பாரம்பரிய வாழிடமாகக் கொண்ட முஸ்லிம்கள் அனைவரையும், சிங்களமொழி மாவட்டங்களில் பல்கிப் பெருகி ஜீவனோபாயத்திற்காக ஊமை யுத்தம் செய்துகொண்டு தமது தமிழ்மொழித் தாயகத்திற்கு திரும்பும் தவிப்போடு காலம் தள்ளும் அகதிகளான முஸ்லிம்கள் அனைவரையும் ஒருங்கிணைத்தே முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

வடகிழக்கு தேசிய இனப்பிரச்சினைக்கான தமிழ், முஸ்லிம் தேசியங்களின் தனித்தனி தனித்துவ அபிலாஷைகளை இணைந்து போராடி பெறுவதற்கு தமிழ்த் தேசியமும், முஸ்லிம் தேசியமும் சம அந்தஸ்தோடு அமர்ந்து இரண்டு சம ஆட்சி அதிகாரங்களுக்கான தீர்வுத் திட்டங்களை முன்மொழிய வேண்டும். இதுதான் தமிழ்மொழிச் சமூகங்களுக்கு உள்ள சுருக்கமான பிரயோஜனமான வழியாக இருக்கும்.

இதைவிடுத்து தமிழர்களுக்கு சமஷ்டி ஆட்சியும், முஸ்லிம்களுக்கு தன்னாட்சி பிராந்திய சபை என்றும் மரியாதைக்குரிய வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் முன்மொழிந்துள்ள தீர்வுத் திட்டம் வடகிழக்கு சிறுபான்மை முஸ்லிம்களை தமிழர் பெரும்பான்மையில் தங்கியுள்ள நிலையில் வைத்திருக்கவே உதவி செய்யும். 1945 இல் அதிகாரத்தை நாட்டு மக்களுக்கு கையளிப்பதற்கான நேரம் வந்தபோது புதிய அரசியல் அமைப்புக்காக அப்போதைய அமைச்சரவை சமர்ப்பித்த முன்மொழிவுகள் இலங்கையிலுள்ள சிறுபான்மையினரை கீழ் நிலையிலும் பெரும்பான்மையினரில் தங்கியிருக்கும் வகையிலும் குறிப்பிட்டுடிருந்தமையினால் தமிழர்கள் அவர்களின் முன்மொழிவு களை ஒருமித்த குரலில் நிராகரித்தனர். அதே போன்றே வடகிழக்கு முஸ்லிம்கள் தமக்கு தன்னாட்சி பிராந்திய சபையென்று தம்மை கீழ்நிலையில் வைத்திருக்கும் வடமாகாண சபையின் தீர்வு முன்மொழிவுகளை ஒருமித்த குரலில் நிராகரிக்கின்றனர்.

இணைந்த வடகிழக்கில் தமிழர்களுக்கு ஒரு ஆட்சி அதிகாரத்தை உருவாக்கி அந்த ஆட்சியின் முதலாவது முதலமைச்சராக ஒரு தகுதி வாய்ந்த

முஸ்லிமை நியமிப்பது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா கூறியிருப்பது மனதை மிகவும் சங்கடப்படுத்துவதாக இருக்கிறது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு அமைச்சரவை பதவி தருவதாக அன்றைய பிரதமர் டீ.எஸ். சேனநாயக்க ஆசை காட்டியதற்கும் இன்று சம்பந்தன் ஐயா முஸ்லிம் ஒருவருக்கு முதலமைச்சர் பதவி தருவதாக சொல்வதற்குமிடையில் எந்த வேறுபாடும் கிடையாது.

பதவி ஆசைக்கு ஜீ. ஜீ. பொன்னம்பலம் போன்ற தமிழ் காங்கிரஸ் தலைவர்கள் போனதை நியாயப்படுத்தும் வகையில் சம்பந்தன் ஐயா பேசிய பேச்சுத்தான் தமிழர் ஆட்சியில் முஸ்லிம் முதலமைச்சர் வழங்கும் பேச்சு. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மீது நாம் வைத்திருந்த நம்பிக்கையை யும், மதிப்பையும் அவருடைய சொல்லும் செயலும் ஆட்டம் காணவைத்துள்ளன.

வடகிழக்கு முஸ்லிம் தேசியத்தை குறைத்து மதிப்பிடுவதோ அல்லது பகைத்துக் கொள்வதோ தமிழ் தேசியத்தின் அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட அர்த்தமுள்ள சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை கொச்சைப் படுத்தக்கூடிய சாத்தியங்களைக் கொண்டிருக்கின்றது. இதனை சரியாக எடைபோட்டுக் கொள்வதில் தமிழர் தரப்பு தவறிழைத்துவிடக்கூடாது. வடகிழக்கு தமிழர்களின் நியாயமான போராட்டம் வெற்றியடைய வேண்டும் என இத்தனைக்கும் பின்னரும் நாம் விரும்புகிறோம்.

தமிழ் தேசியத்தின் நியாயமான உரிமைப் போராட்டத்திற்காக குரல் கொடுக்கும் வடகிழக்கு முஸ்லிம்கள் தமது தேசியத்திற்கு ஒரு காலத்தில் வழிகாட்டிகளாக இருந்த தமிழ்த் தேசியத்தின் போராட்டங்களை நன்றிக்கட னோடு தான் நினைவு கூர்கிறார்கள்.

நான் நிபந்தனையின்றி வடக்கு கிழக்குக்கு ஆதரவாக பேசுகிறேன் என்ற அரைகுறை அறிவில் என்னைத் திட்டித் தீர்க்கும் என் சமூகத்தின் சிறுசுகளைப் பற்றி நான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன். அவர்கள் முஸ்லிம் தேசியத்தை சேர்ந்தவர்கள் என்பதால். "நாய்கள் குரைத்தபோதும் ஒட்டகை கூட்டம் தனது யாத்திரையைத் தொடரும்" என்பது நமக்கு பரிச்சயமான பழமொழி. இந்த அபவாதக்காரர்கள் என்னை விமர்சித்து தம்மை எனக்கு நினைவுறுத்தும் போதெல்லாம் "நீ சொல்லும் ஒரு வார்த்தையையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அதனைச் சொல்லும் உனது உரிமைக்காக நான் மரணம் வரை போராடுவேன்" என்று வோல்டயர் சொன்னது தான்

எனக்கு ஞாபகத்திற்கு வரும்.

முஸ்லிம் அரசியல் முன்னோடிகளுக்கு நாம் சொல்வதெல்லாம் ஒன்றுதான். வடக்கு கிழக்குத் தமிழர்களுக்கு பாடம் புகட்டுவதற்காக நமது தலைகளை தீக்கொள்ளியால் தேய்த்துக் கொள்பவர்களாக நாம் இருக்கத் தேவையில்லை. நமக்கு அநியாயம் செய்தவர்களை வாழ்நாள் பூராய் வருத்தத்தில் வீழ்த்திப் பார்க்க வேண்டும் என்ற வெஞ்சம் நம் யாருக்கும் லாபகரமானதாயிராது. அந்த வெஞ்ச உணர்வு இரு சமூகங்களுக்கும் உரிய நிரந்தரமான தீர்வுத் திட்டத்திற்கு குந்தகம் விளைவிக்காமல் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இதுகூட ஏதோ பெரும் நன்மைக்குத்தான் நேர்ந்துள்ளதாய் இருக்கும். அதனால் அவர்களுக்கு நெருக்கமான ஒரு சந்தர்ப்பத்தை இப்போது வழங்குவதன் மூலம் நமது தேசியத்தின் நிரந்தர நலன்களை நம்மால் பாதுகாக்க வழிசெய்ய முடியும் என்றிருந்தால், அதனைச் செய்வதுதான் அறிவு பூர்வமானதாக இருக்கும்.

இவ்வாறு தமிழ் தேசியத்திற்கு இணைந்த வடகிழக்கில் ஒரு சமஷ்டி அல்லது மாநில ஆட்சியையும் முஸ்லிம் தேசியத்திற்கு இன்னொரு சமஷ்டி அல்லது மாநில ஆட்சியையும் பெற்றுக்கொள்ளும் ஏற்பாடுகளுக்கு தமிழ்த் தேசியம் இணங்கும் பட்சத்தில் வடக்கோடு கிழக்கை ஒன்றிணைப்பதனை எந்த வடகிழக்கு முஸ்லிமும் எதிர்ப்பதற்கு அர்த்த புஷ்டியான தூரநோக்குள்ள எந்த நியாயமும் இருக்க மாட்டாது.

அதனால் வடக்கு கிழக்கை உதயஸ்தானமாகக் கொண்ட மூன்று முஸ்லிம் கட்சிகளான முஸ்லிம் காங்கிரசும், மக்கள் காங்கிரசும், தேசிய காங்கிரசும், முஸ்லிம் அரசியல் அமைப்புக்களும் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பை காலதாமதமின்றி அங்குரார்ப்பணம் செய்வது அவசியமானது. அவ்வாறு முஸ்லிம் தேசிய கூட்டமைப்பை அங்குரார்ப்பணித்து, முஸ்லிம் தேசியத்தின் அபிலாஷையான தனித்துவ ஆட்சிக்கான கோரிக்கையை தனிப்பட முன்மொழிய வேண்டும். பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்போடு சம அந்தஸ்திலான பேச்சு வார்த்தைகளை தயக்கமின்றி ஆரம்பித்து தமிழர்களுக்கான மாநில ஆட்சிக்கும், முஸ்லிம்களுக்கான மாநில ஆட்சிக்கும் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். அத்தோடு இருதரப்பாரும் தனித்தனியாகவும், கூட்டாகவும் தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும். ஒன்றித்து நிற்க வேண்டும். உரத்துக் குரலெழுப்ப வேண்டும்.

தமது பட்டம் பதவிகளுக்கான படாடோபங்களை ஒரு பக்கத்திற்கு ஒதுக்கி

வைத்துவிட்டு வடகிழக்கு முஸ்லிம் தேசியத்தின் பேச்சாகவும் மூச்சாகவும் முஸ்லிம் கட்சிகள் மீளவதாரம் செய்துகொள்ள வேண்டும்.

முஸ்லிம்களுக்கான மாநில ஆட்சியை அறிமுகப்படுத்தி நாம் பகிரங்கக் கூட்டங்களை பல இடங்களில் நடாத்தி இருந்தோம். உள்நாட்டு வெளிநாட்டு முஸ்லிம்களும் அதனை பார்த்துக் கொள்ளும் வகையில் சமுக வலையத் தளங்களில் நேரடி ஒளிபரப்பு மூலம் வெளிப்படுத்தினோம். அதன் பிரதி பலனாக முஸ்லிம்களின் மனதில் இருந்த சந்தேகம் கலையத்தொடங்கி நம்பிக்கை வளரத்தொடங்கி பலரும் சிந்திக்கத் தொடங்கினர்.

குறிப்பாக கிழக்குப் பிரிவினைவாதத்தின் நீண்ட காலத்துப் பேச்சாளியான தேசிய காங்கிரசின் தலைவர் முன்னாள் அமைச்சர் அதாஉல்லா வடகிழக்கு முஸ்லிம்களுக்கு வடகிழக்கு முஸ்லிம் மாநில ஆட்சி உறுதிப்படுத்தப் படுமானால் வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்ப்பதில் எந்த அர்த்தமுமில்லை, என்ற தோரணையில் பேசியுள்ளது. முஸ்லிம் தேசியத்திற்கு நம்பிக்கையூட்டும் ஒரு சைக்கினையாகும்.

வடகிழக்கு மாகாணங்களிலுள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் ஒவ்வொரு தலைவர் தெரிவு செய்யப்பட்டு ஐந்து தலைவர்களின் கூட்டுத்தலைமைத்துவத்திலேயே முஸ்லிம் கூட்டமைப்பின் தலைவர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பது எமது ஆலோசனைகளில் உள்ளது.

யாழ்ப்பாணம், வன்னி, அம்பாரை, மட்டக்களப்பு, திருமலை ஆகிய ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் இருந்து தெரிவுசெய்யப்பட வேண்டியவர்களில் முஸ்லிம்கள் ஆக அதிகமுள்ள அம்பாரை மாவட்டத் தலைவராக நாம் சகோ. அதாஉல்லாவின் பெயரைத்தான் எமது ஏலவே உள்ள நூலில் சிபார்சு செய்திருக்கிறோம். அதாஉல்லாவும் முஸ்லிம் தேசியத்தை உருவாக்கும் முயற்சியில் முழு மூச்சாய் ஈடுபட முன்வருவாரானால் அதற்குரிய நம்மாலான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்க நாம் தயாராக இருக்கிறோம்.

கிழக்குப் பிரிவினைவாத அடுத்த பேச்சாளர் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவர், அமைச்சர் றிசாட் பதியுத்தீன் தான். தானே ஒரு அகதியான அமைச்சர் றிசாட் பதியுத்தீன் வடமாகாண முஸ்லிம் அகதிகளுக்கு ஆற்றியுள்ள அபிவிருத்திப் பணிகள் யாராலும் செய்ய முடிந்திராதவை. அது மட்டுமல்லாது வில்பத்து விடயத்தில் அவர் காட்டிய அக்கறையும் அதுபற்றிய அவரது அறிவும், விவேகமும், வீறாப்பும், போராட்ட குணாம்சமும்

முஸ்லிம்களின் மனதில் அவரை ஒரு உயர்ந்த ஸ்தானத்திலேயே வைத்திருக்கிறது.

வடமாகாணத்தை மையப்படுத்தி அவர் உருவாக்கியுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இன்று நாடு பூராகவும், குறிப்பாக கிழக்கிலும் பிரபல்யம் அடைந்து வருகிறது. முஸ்லிம் அரசியல் தலைமைத்துவத்தைக் குறிவைத்து றிசாட் காய்களை நகர்த்துவதாக கசிந்துள்ள செய்தி முஸ்லிம் காங்கிரசை எரிச்சலுக்குள்ளாக்கி இருப்பது தெரிகிறது. றிசாட்டினதும் றஊப் ஹக்கீமினதும் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவத்துக்கான போட்டியில் வடகிழக்கு முஸ்லிம் தேசிய இனப்பிரச்சினை பின்தள்ளப் பட்டுவிடும் என்பது தெரிகிறது.

றிசாட்டின் கிழக்குப் பிரிவினைவாதத்திலுள்ள நியாயங்கள், சவால்களை சந்திக்க தயாராக உள்ளவையாகவே தெரிகின்றன. வடகிழக்கு தேசிய இனப்பிரச்சினை தொடர்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உள்ளக்கிடக்கையும், வடமாகாண சபை 22.04.2016 இல் முன்வைத்துள்ள தீர்வு வரைபுகளும் றிசாட்டை மோசமாக ஏமாற்றியிருப்பது மட்டுமல்லாமல், எரிச்சலையும் அதிகரித்திருக்கின்றன. அவையே றிசாட்டின் பிரிவினைக் கோஷத்திற்கு உந்து சக்தியாகவும் அமைந்தன.

மீளக் குடியேறவேண்டுமென்று ஆழத்துடித்துக்கொண்டிருக்கும் வடமாகாண முஸ்லிம் அகதிகளுக்கு அவர் என்ன பதிலைச் சொல்வது? தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கையும், கிழக்கையும் இணைக்க உதவத் தயாராக இருந்த முஸ்லிம்களுக்கு இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கில் எந்த அதிகார சபையும் இல்லை என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாக தெரிகிறது. அவர்களுக்கு வடகிழக்கு முஸ்லிம்கள் ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. அதனால் எப்படி முஸ்லிம்கள் வடகிழக்கு இணைப்பை ஆதரிக்க முடியும்? இதுதான் றிசாட்டின் கேள்வி. இதற்கு த.தே.கூ. என்ன பதிலைச் சொல்லப்போகிறது?

துப்பாக்கி முனையில் துரத்தியடித்து அகதிகளாக்கப்பட்டவர்களில் முக்கால்வாசிப்பேர், சுமார் 100,000க்கும் அதிகமானவர்கள் சிங்கள மாகாணங் களில் சிதையுண்டு வாழுகின்றனர். எப்போது ஊருக்குத் திரும்புவதாம்? என்ற இளசுகளின் கேள்விக்கு என்ன ஆறுதல் சொல்வது? எந்த அதிகாரமும் இல்லாமல் அங்குபோய் இன்னொருமுறை விரட்டி அடிக்கப்படுவதற்காகவா? எப்படித் திரும்பிச் செல்லலாம்? என்ன ஆதாரத்தின் பேரில் திரும்பிச் செல்லலாம்? அதற்கு என்ன வழிவகைகளை த.தே.கூ. மேற்கொண்டிருக்கிறது?

சட்ட ரீதியாக நடைமுறைபடுத்தக்கூடிய, முஸ்லிம்களின் அமைதி பாதுகாப்பை உறுதிப்படுத்தி நிலைநிறுத்தக் கூடிய, அந்நியத் தலையீடுகள் இன்றி சுதந்திரமாய் வாழ, சுயாட்சி செய்ய என்ன அதிகார சபைக்கான ஆலோசனையை முன்வைத்திருக்கிறது?

அவர்கள் கூறும் அவர்களுக்கான சமஷ்டி ஆட்சியின்நிலை, பரிமாணம், தத்துவம், அதிகாரங்கள் போன்ற இன்னோரன்னவற்றை தீர்வு வரைபில் வடமாகணசபை விபரித்துக் கூறியிருக்கின்றது. ஆனால் வடமாகாணசபை முஸ்லிம்களுக்கென ஏற்படுத்த விரும்பும் தன்னாட்சிப் பிராந்திய சபையின் தத்துவங்கள், அதிகாரங்களைப் பற்றி வடமாகாண சபை தனது தீர்வு வரைபில் எதையும் குறிப்பிடவில்லை.

சிங்கள மாகாணங்களில் சிதறுண்டு வாழும் மலையகத் தமிழர்களுக்கும் வடமாகாணசபை, மலையகத்தமிழ் தன்னாட்சிப் பிராந்திய சபைக்கான தீர்வை முன்மொழிந்திருக்கிறது. வடகிழக்கு முஸ்லிம்களையும், மலையக தமிழர்களையும் ஒரே தராசில் நிறுத்து மலையகத் தமிழர் அவர்களைப் பொறுத்தவரை கதிப்பதாக காட்டியிருக்கிறது. இதன்மூலம் வடகிழக்கு முஸ்லிம்களை வடமாகாண சபை நான்காம் தரப்பிரஜைகளாகக் காட்டியிருக்கிறது. இந்த மனநிலையோடு உள்ளவர்களுக்கு அதிகாரத்தை இரட்டிப்பாக்க வடக்கையும் கிழக்கையும் இணைக்க உதவத்தான் வேண்டுமா? என்று றிசாட் கேட்டால் என்ன பதிலைச் சொல்ல முடியும்?

வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் அனுபவங்களையும் தனித்துவத்தையும் தமிழர்கள் அகங்காரமின்றி யோசித்துப் பார்த்தால் ஏலவே செய்துள்ளவற்றின் நாற்ற நெடிகளும், இப்போது செய்து கொண்டிருப்பனவற்றின் பித்தல் பிடுங்கல்களும் வெளிச்சத்துக்கு வந்துவிடும். ஆனால் பாடம் கற்றுக்கொள்ள தயாரில்லாத மனதில் படிப்பினை எப்படி படியும்? குதிரைக் கொம்புதான். இப்படி நினைக்கத் தூண்டப்பட்டுள்ள வடமாகாண முஸ்லிம் புத்தி ஜீவிகளும் பிரிவை வெறுப்போடு தூக்கிப்பிடிக்க நேர்ந்துள்ளது.

கிழக்கு மாகாண முஸ்லிம்களாவது நிம்மதியாக இருக்கட்டும் என்று தானோ றிசாட் பிரிவினை வாதத்தை தூக்கிப்பிடித்துள்ளார்? தமிழ்த் தேசியம் தான் பதில் சொல்ல வேண்டும். அனுபவ ரீதியான அணுகுதல்கள் மூலம் பேச்சு வார்த்தைகளினூடாக நிலைமைகளை கட்டுக்கோப்புக்குள் கொண்டுவர முடியும். ஆனால் கடுவன் பூனைகளுக்கு யார் மணி கட்டுவது என்ற நிலைமைக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

வடமாகாண முஸ்லிம்களின் சேமலாபங்களை உத்தரவாதப்படுத்த வடமாகாணத்து முஸ்லிம்களுக்கு மட்டும் ஒரு தனியான அதிகார அலகை உருவாக்குவதென்பது நடைமுறைச் சாத்தியமற்றது. அதனால் வடமாகாண முஸ்லிம்களையும், கிழக்கு மாகாண முஸ்லிம்களையும் ஒருங்கிணைத்த ஒரு அதிகாரசபை பற்றி யோசிப்பதே அடுத்த கட்ட நகர்வாக இருக்கும். அதைச் செய்வது எப்படி?.

நிலத்தொடர்பற்ற கிழக்கின் தமிழ் பெரும்பான்மைப் பிரதேசங்களை ஒன்றிணைத்து அடையாளப்படுத்தாமல் முழுக்கிழக்கையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவரும் த.தே.கூவின் யோசனையை முஸ்லிம்கள் முற்றாக நிராகரிக்கின்றனர். ஆகுமான அத்தனையும் செய்து அதைத் தடுக்க அவர்கள் முற்படுவார்கள். சரிதானே! இல்லையென்றால் ஆகும் வழியை த.தே.கூ. சொல்ல வேண்டும். சொல்வார்களா? சொல்லட்டும்!

தமிழரசுக் கட்சி மாநாடுகளிலும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள், விடுக்கப்பட்ட உத்தரவாதங்கள் எல்லாம் கல்மேல் எழுத்தாக இருக்குமென்று பார்த்தால் அவை அனைத்தும் நீர்மேல் எழுதிய வெறும் வாய்ச்சவடால்கள் தான் என்று த.தே.கூட்டமைப்பு சொல்லுமாக இருந்தால், பொய் வாக்குறுதி களிலும் உத்தரவாதங்களிலும் முஸ்லிம்களின் தலையைத் தடவி வைத்திருந்து விட்டு வேளை வந்ததும் வெடி வைத்துத் துரத்தியடித்தது தமிழ் மனோநிலையின் பரிணாம வளர்ச்சியாகும். இவர்களோடு எப்படி கூடிக் குடித்தனம் நடத்துவது என்று றிசாட் கேட்டால் என்ன பதில் சொல்வது?

விரும்பினால் இணைப்புக்கு ஆதரவு அளியுங்கள். இல்லாவிட்டால் உங்கள் இஷ்டம் என்று சொல்லுவது மட்டும்தான் இப்போது தமிழர்களுக்கு பாக்கியாக உள்ளதெல்லாம். சொல்லட்டும்!

இறுதியாக றிசாட் த.தே.கூ.வுக்கு சொல்ல இருப்பது ஒன்றுதான் என்று தெரிகிறது. கிழக்கு பிரியக்கூடாது என்று விரும்புகிறீர்களா? வடக்கும் கிழக்கும் இணைக்கப்படவேண்டுமென்று தவிக்கீறிர்களா? இணைந்த வடகிழக்கில் தமிழர்களுக்கென ஒரு சமஷ்டி ஆட்சியோ அல்லது அதற்கு பகரமான வேறு ஏதும் ஆட்சியோ கிடைக்க வேண்டும் என்று துடிக்கிறீர்களா? உங்கள் மக்களை நீங்களே ஆள வேண்டுமென்று துள்ளுகிறீர்களா? நல்லது! அத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். அதற்கு அப்பால் முஸ்லிம்களையும் ஆள வேண்டு மென்று அக்ல்க்கால் வைக்க முனையாதீர்கள். இணைந்த வடகிழக்கில்

தமிழர் பெரும்பான்மை பிரதேசங்களை உள்ளடக்கிய மாநிலத்தில் உங்கள் ஆட்சி அதிகாரங்களை மட்டுப்படுத்தி உங்கள் மக்களை சிறந்த முறையில் ஆட்சி செய்யுங்கள். அதற்கு எங்களுடைய மானசீகமான வாழ்த்துக்கள்.

ஆனால் அதற்கு அப்பால் ஒரு அடியையும் எடுத்து வைத்து மனங்களை புண்ணாக்கிக் கொள்ளாதீர்கள். வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் பெரும் பான்மையாக இருக்கும் பிரதேசங்களில் முஸ்லிம்களின் ஆட்சியை உருவாக்குவதற்கு முடியுமானால் உதவி ஒத்தாசை புரியுங்கள். மாறாக குறுக்கே நின்று குந்தகம் விளைவிக்க முனையாதீர்கள். அடுத்தவர் உரிமையிலும் ஆசை வைக்காதீர்கள். வாழுங்கள்! பிறரையும் வாழ விடுங்கள்! என்று றிசாட் சொன்னால் என்ன செய்யப் போகிறார்கள்?

றிசாட்டின் மேல் உங்களுக்கு ஏதேனும் தனிப்பட்ட கோபதாபம் இருந்தால் அதற்காக முழு வடகிழக்கு முஸ்லிம்களையும் தண்டிக்க எண்ணாதீர்கள். அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள அடம்பிடிக்கும் தமிழர்களை அவர்கள் இஷ்டத்திற்கே விட்டு விட்டு அவர்கள் தண்டிக்கப்பட அனுமதிக்கும் அதே வேளையில் நாமும் தண்டிக்கப்படுகிறோம் என்பது றிசாட்டுக்கு நன்றாகவே தெரியும்.

தமிழ்மொழிச் சமுகங்கள் இரண்டில் ஒன்றுக்கு ஏதேனும் திகைப்பும் தடுமாற்றமும் ஏற்பட்டிருந்தால் அதனை சுகப்படுத்தும் கடமை மற்ற சமூகத் திற்கு ஒரேயடியாய் இல்லாமல் போய்விடாது. தமிழர்களுக்கு அவர்கள் அறியாத புறத்திலிருந்து எழும்பச் சாத்தியமான திடுக்கங்களையும் நடுக்கங் களையும் பற்றி அறிந்திருந்தால் அதனை அறிவிக்க வேண்டிய பொறுப்பு நிச்சயமாக றிசாட்டுக்கும் உண்டு.

தமிழர் தரப்பை பேச்சுவார்த்தைக்கு இழுத்து யதார்த்தத்தை அவர்களுக்கு திரை நீக்கம் செய்யவேண்டிய பொறுப்பும் தமிழ்மொழித் தனையன் என்பதால் றிசாட்டுக்கும் உண்டு. உள்ள ஒரே வழி முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி தமிழ் தேசியக்கூட்டமைப்போடு சம அந்தஸ்தில் பேச்சு வார்த்தை களில் விசுவாசமாக ஈடுபட வைத்து பரஸ்பர நன்மைக்கான தீர்வுகளைத் தேடி ஒருமித்து, முன்வைத்து உரிமைகளை வெல்லுவது தான். அதனால் றிசாட் மறுபுறத்து முயற்சிகளிலும் பொறுமையுடனான ஆர்வத்தைக் காட்ட வேண்டியது அனைத்து தமிழ்பேசும் மக்களுக்கு நன்மையானதாகவே முடியும்.

முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் வன்னித்தேர்தல் மாவட்டத் தலைவராகவும்

ஐவர்கொண்ட தலைவர் குழுவின் முதல் தலைவராகவும் றிசாட் பொறுப்பேற்க வேண்டுமென்று நாம் அவரிடம் மூன்று மாதங்களுக்கு முன்னரேயே சொல்லி இருந்தோம். அவர் அதனை அப்போது ஏற்றுக்கொள்ளவில்லை. நாம் நினைக்கின்ற மாதிரி எதுதான் நடக்கிறது! ஆனால் இப்போது அதற்குரிய காலம் கனிந்து வந்தாற் போல் தெரிகிறது. றிசாட் விவேகி மட்டுமல்ல வேகியும்தான். அவரது வேகத்தை பார்க்கத்தான்போகிறோம். பார்க்கலாம்.

கிழக்குப் பிரிவினைவாத பேச்சாளிகளான தேசிய காங்கிரஸ் தலைவர், முன்னாள் அமைச்சர் அதாஉல்லா என்றாலும் சரி. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர், இந்நாள் அமைச்சர் றிசாட் பதியுத்தீன் என்றாலும் சரி இருவரின் நேரான கொள்கைகளும் எதிரான கோட்பாடுகளும் சமாந்தரமாகவே செல்கின்றன.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்படுவதற்கு முஸ்லிம்கள் முன்வைக்கும் நிபந்தனை இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கில் தமிழர் பெரும்பான்மை பிரதேசங்களில் தமிழர்களுக்கென சமஷ்டி ஆட்சியோ அல்லது அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்ட மாகாணசபையோ கிடைப்பதாக இருந்தால், அதே இணைக்கப்பட்ட வடகிழக்கில் முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கென அதேவாறான சமஷ்டி ஆட்சியோ அல்லது அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்ட மாகாணசபையோ அதே தரத்திலும், அதே ரகத்திலும் கிடைப்பதாக இருக்க வேண்டும். அப்படி முஸ்லிம்கள் பெறுவதை தமிழர்களும், தமிழர்கள் பெறுவதை முஸ்லிம்களும் உறுதிப்படுத்த வேண்டும். அப்படிச்செய்ய தமிழர்கள் தயாரில்லாமலோ, விரும்பாமலே இருந்தால், அதன் விளைவு கிழக்குப் பிரிவினையோடு மட்டும் நிற்காது என்பதுதான் இந்த இரண்டு முஸ்லிம் கட்களின் வாதமும், போக்கும், நிலைப்பாடுமாகும். தமிழர்கள் அவர்களது கருத்தை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு எழுத்து மூலம் அரசாங்கத்திற்கு அறிவித்து பொதுத்தீர்வை உறுதிப்படுத்தும், துரிதப் படுத்தும் ஏற்பாடுகளில் முஸ்லிம்களையும் சேர்த்துக்கொண்டு அதிரடியாக இறங்க வேண்டும்.

அதற்கு தமிழர்கள் தயாரில்லாமல் விட்டால் "தலை தப்பியது தம்பிரான் செயல்" என்று முஸ்லிம்கள் மேலும் முனைப்போடு இறங்கி எதிர்ப்புறத்து வேலைகளை இழுத்துப்போட்டுக் கொண்டு செய்வார்கள் என்பது மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸின் மனதில் நிழலாடும் விஷயங்களாகும். இவ்வாறு இவ்விரண்டு கட்சிகளின் நிலைப்பாடுகளும், நிலைகளும் பகிரங்கப் படுத்தப்பட்டுள்ளன.

மூன்றாவதும், முக்கியமானதுமான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டும் இன்னும் வாயைத் திறந்து ஒரு வார்த்தையை கேட்கும்படியாக சொன்னதாக ஒருவரும் சொல்லவில்லை. கிழக்கை பிரிக்கச் சொல்லவுமில்லை, வடக்கோடு இணைக்கச் சொல்லவுமில்லை. வடக்கு கிழக்கை இணைத்து தமிழர்கள் கோரியிருப்பதைபோல முஸ்லிம்களுக்கு ஒரு சமஷ்டி ஆட்சியையோ அல்லது அதற்கு ஏறத்தாழ ஈடான வேறு எந்த அதிகார சபையையோ கூட அது கேட்கவுமில்லை. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் மல்லுக் கட்டிக்கொண்டு மழுப்பித்திரிவதைப்பார்க்க பாவமாக இருக்கிறது.

இருப்பினும் மன ஆறுதலுக்காகவாவது ஒரு சைக்கினையையாவது செய்ய முடியாமல் முஸ்லிம் காங்கிரஸ் காலம் கடத்திக் கொண்டிருக்கிறது. இந்தப் பொறுப்பற்றபோக்கு முஸ்லிம்கள் மத்தியில் முஸ்லிம் காங்கிரசுக்குரிய செல்வாக்கை சரியச் செய்து வருகிறது.

போதாததற்கு முஸ்லிம் காங்கிரசில் நீடித்துவரும் செயலாளர் நாயகம் ஹசன் அலியின் உரிமைப் பிரச்சினைகளால் ஏற்பட்டுள்ள இழுபறிகள் ஒருபுறமும், தவிசாளர் பசீர் சேகுதாவுத்தினால் முன்வைக்கப் பட்டுள்ள நிதி மோசடி சம்பந்தமான நெருக்குதல்கள் மறுபுறமுமாக ஏனைய உட்கட்சி பூசல்களும் சேர நிதானமாகச் சிந்தித்து நீடித்து நிலைக்கக்கூடிய ஒரு தீர்வை தேடுவதிலிருந்தும் முஸ்லிம் கங்கிரசை பின்னடையச் செய்துள்ளன.

இந்த பலஹீன நிலையை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு றிசாட்டின் மக்கள் காங்கிரஸ் வேறு சில பல உத்திகளையும் கையாண்டு முஸ்லிம் காங்கிரசுக்கு மாற்றீடான கட்சியாக வளர்ந்துவருகிறது. றிசாட்டுடைய கிழக்குப் பிரிவினை வாதம் இதனையும் குறிவைத்து செய்யப்படுவதாக சொல்லப் படுகிறது. இவை எல்லாவற்றையும் விட முக்கியத்துவம் பெற்றுள்ள விடயம் மு.கா. தலைவர் அமைச்சர் ரஊப் ஹக்கீமுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே உள்ள சம்பந்தா சம்பந்தம்தான். த.தே.கூ. தலைவர் சம்பந்தன் ஐயாவும் பேச்சாளர் சுமந்திரனும் மு.கா. தலைவர் ஹக்கீமோடு ஒரு புரிந்துணர்வோடும் இணக்கப்பாட்டோடும் நெருக்கமான நல்லுறவோடும்தான் அண்மைக்காலமாக இருந்து வருகின்றார்கள்.

சம்பந்தன் ஐயாவும் ரஊப் ஹக்கீமும், பிரதமர் ரணிலும் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணத்தில் வட கிழக்கின் பிரச்சினைகள் தொடர்பாக மூவரும் ஒரு இணக்கப்பாட்டை எட்டியிருக்க வேண்டும் என்பது யூகத்திலுள்ள எதிர்பார்ப்பாகும். அது என்னவென்று இதுவரை அவர்கள் யாரும் வெளிப்

படுத்தாது விட்டாலும்கூட சம்பந்தன் ஐயா வடக்கு கிழக்கு ஒன்றிணைப்பு பற்றியும், தமிழர்களுக்கான சமஷ்டி ஆட்சி பற்றியும் அழுத்தம் திருத்தமாக கூறிவருவதிலிருந்தும் அது பற்றி ஹக்கீம் எதுவித எதிர்ப்பும் காட்டாமல் இருப்பதில் இருந்தும் தீர்வுத் திட்டத்தில் வடகிழக்கு இணைப்பு முஸ்லிம் காங்கிரசினால் எதிர்க்கப்படவில்லை. என்ற முடிவுக்கே வர வைக்கின்றது.

அவ்வாறான யூக முடிவின் அடிப்படையில், வடக்கு கிழக்கு இணைப்புக்கான ஹக்கீமின் அங்கீகாரத்திற்கு பிரதிபலனாக அவ்வாறு இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரு முஸ்லிம் பெரும்பான்மை அதிகார சபையை பெறுவதற்கு ஹக்கீம் இணக்கம் தெரிவித்திருக்க வேண்டும். அந்த முஸ்லிம் களுக்கான அதிகார சபை கிழக்கு முஸ்லிம்களுக்கு மட்டுமா அல்லது வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் அனைவரையும் சேர்த்த நிலையிலா? எம்மைப் பொறுத்தவரையில் ரஊப் ஹக்கீம் வடக்கு கிழக்கு முஸ்லிம்களை மொத்தப் படுத்தி வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களை ஒன்றிணைத்து அந்த மாநிலத்துக்கு கோரியிருப்பார் என்று நாம் நம்பவில்லை.

"* மாகாண சபைத்தேர்தல்களிலும், நாடாளுமன்றத் தேர்தல்களிலும் முஸ்லிம் சமுகத்துக்கான பாதுகாப்பு முஸ்லிம் மாகாண சபை என்று தீர்க்கமாக கூறினார். அது மாத்திரமல்லாமல் அதைப் பெறுவதற்கான நடைடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் அதிகாரத்தை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசிடம் ஒப்படைத்துள்ளனர்" (எம்.எச்.எம். அஷ்ரப் - தினக்குரல் 15.07.1992)

"தற்போதைய மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை முழுமையாகப் பெற்ற ஒரு தனியான அரசியல் அலகுதான் வடகிழக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் அச்சங்களுக்கு போதிய பாதுகாப்பாக அமையும். இத்தகைய அரசியல் அலகு வழங்கப்பட வேண்டும் என்தே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாடாகும்" (எம்.எச்.எம். அஷ்ரப் - வீரகேசரி 25.05.1992)

ரஊப் ஹக்கீம், மேற்சொன்ன செய்தியில் அஷ்ரப் கூறிய வகைகளில் வடகிழக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் அச்சங்களுக்கு போதிய பாதுகாப்பாக அமையும் ஒரு அரசியல் அலகையா சந்பந்தன் ஐயாவோடு பேசி இணக்கம் கண்டிருக்கின்றார்?

"மனித நீதி நியாயங்களின் அடிப்படையில் நாம் முன்வைத்துள்ள எமது ஜனநாயக ரீதியில் ஆன இப்போராட்டத்தை முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் கைவிடமாட்டாது." (எம்.எச்.எம். அஸ்ரப் - வீரசேகரி 06.08.1992)

முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் எமது ஜனநாயக ரீதியிலான இப்போராட்டத்தை கைவிடமாட்டாது என்று கூறியுள்ளதை ஹக்கீம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறாரா?

"வடகிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பை ஒரு முஸ்லிம்களுக்கான மாகாணசபையை உருவாக்குவதிலேயே உறுதிப்படுத்த முடியும். (எம்.எச்.எம். அஸ்ரப் - சன்டே டைம்ஸ் 19.07.1992)

வடகிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முஸ்லிம்களுக்கான ஒரு மாகாண சபையை உருவாக்குவதில் ஹக்கீம் கண்ணும் கருத்துமாய் இருக்கிறாரா?

"நிபந்தனை அற்ற முறையில் வடக்கையும், கிழக்கையும் இணைக்கவேண்டுமென்று அடம்பிடிப்பதோ அல்லது நிபந்தனை அற்றமுறையில் வடக்கிலிருந்து கிழக்கை பிரித்துவிடவேண்டுமென்று கோருவதோ யதார்த்தத்தை உணர்ந்த நிலைப்பாடுகள் ஆகாது" (எம்.எச்.எம். அஸ்ரப் வீரகேசரி 19.11.1992)

சம்பந்தன் ஐயாவோடு ரஊப் ஹக்கீம் செய்திருக்க சாத்தியமான உடன்பாட்டில் வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்கு ஹக்கீம் முன்வைத்த நிபந்தனை என்ன? முழு வடக்கு கிழக்கிலுமுள்ள முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களை ஒன்றிணைத்து முஸ்லிம்களுக்கான அதிகார அலகையா?

முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் சொல்லியிருப்பவை

01. முஸ்லிம் சமுகத்திற்கான பாதுகாப்பு முஸ்லிம் மாகாணசபையே

02. அதை முன்னெடுத்துச் செல்லும் அதிகாரம் முஸ்லிம் காங்கிரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

03. வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அச்சங்களுக்கு போதிய பாதுகாப்பு ஒரு தனியான அரசியல் அலகுதான்.

04. முஸ்லிம்களுக்கு ஒரு தனியான அரசியல் அலகுதான் முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாடு.

05. இப்போராட்டத்தை முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் கைவிடாது.

06. நிபந்தனை அற்ற முறையில் வடக்கையும் கிழக்கையும் பிரிக்கக் கோருவது யதார்த்தத்தை உணர்ந்த நிலைப்பாடல்ல.

07. நிபந்தனை அற்ற முறையில் வடக்கையும், கிழக்கையும் இணைக்கக் கோருவது யதார்த்தத்தை உணர்ந்த நிலைப்பாடு அல்ல.

முஸ்லிம் காங்கிரஸின் இந்த நிலைப்பாடுகள் மூலம் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் அச்சங்களுக்கு போதிய பாதுகாப்பாக அமையக் கூடியது முழு வடகிழக்கிலும் முஸ்லிம்கள் பெரும் பான்மையாக உள்ள பிரதேசங்களை ஒன்றிணைத்து அதில் அதிகாரங்களை முழுமையாகப் பெற்ற ஒரு முஸ்லிம் மாகாணசபையையோ அல்லது வடகிழக்குத் தமிழர்கள் கோரியுள்ளவாறான ஒரு சமஷ்டியையோ பெற்றுக்கொள்ளுவது தான்.

முஸ்லிம் காங்கிரசிடம் முஸ்லிம்கள் ஒப்படைத்துள்ளதாக அஸ்ரப் கூறியுள்ள அதிகாரத்தைக் கொண்டு வட கிழக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் அச்சங்களுக்கு போதிய பாதுகாப்பாக அமையக்கூடியதான மாகாண சபைகளுக்குரிய முழுமையான அதிகாரங்களைப் பெற்ற ஒரு அரசியல் அலகை இன்று பெற்றுக்கொடுக்க வேண்டிய பாரிய சமூகக் கடமை ரஊப் ஹக்கீமின் தலைமையிலேயே சாட்டப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதுமே கைவிடமாட்டாது என்று கூறியுள்ள ஜனநாயக ரீதியிலான இந்தப் போராட்டத்தை தோளில் சுமக்கவேண்டிய கடமை ரஊப் ஹக்கீமுக்கே உண்டு. இது பற்றி சம்பந்தன் ஐயாவிடமும் சுமந்திரனிடமும் ரஊப் ஹக்கீம் விபரமாக பேசி அவர்களுடைய அங்கீகாரத்தை பெற்றிருப்பார் என்றே நினைக்கத் தோன்றுகின்றது. இதைத்தான் அஸ்ரப் கோரியிருக்கிறார்.

வடகிழக்கை உதய ஸ்தானமாகக் கொண்டு முஸ்லிம்களின் உரிமைக்குரலை ஒலித்து, உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது அல்லவா. விசேடமாக வடகிழக்கு முஸ்லிம்கள் வட கிழக்கில் அனுபவித்த துன்பங்களுக்கும், துயரங்களுக்கும், உரிமை மறுப்புகளுக்கும் எதிராக குரல் எழுப்புவதே முஸ்லிம் காங்கிரசின் முதற் கடமையாக இருந்தது அல்லவா?

இன்று காலம் கனிந்துள்ள நிலையில் அதுபற்றிக் கவலைப்படாமல், கலவரப் படாமல் இருப்பது வடகிழக்கு முஸ்லிம்களுக்கும், அஸ்ரப்புக்கும், முஸ்லிம் காங்கிரசுக்கும் செய்யும் பச்சைத் துரோகமாகவே முடியும். இதனைச்

செய்யவே ரஊப் ஹக்கீம் சந்தரப்பத்தை பார்த்து காத்திருக்கிறாரா? அப்படியு மில்லை யென்றால் வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி குறைந்த பட்சம் ஒரு காரணத்திற்காகவும் சில நியாயங்களுக்குமாகவும் பேசமுடியாத நிலையில் ரஊப் ஹக்கீம் தத்தளித்துக் கொண்டிருக்கிறாரா? அவரைத் தடுக்கும் காரணம் என்ன? நியாயங்கள் யாவை?

அவற்றில் முதலாவது, தென்மேல் சிங்களமொழி மாகாணங்களில் வாழும் முஸ்லிம்கள் வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஆதரவாளர்களாக இருக்க மாட்டார்கள் என்பதே. அது தவிர, வடகீழ் முஸ்லிம்கள், வடகீழ் தமிழர்களுக்கு சமமான அதிகாரத்தை வடகிழக்கை இணைத்து பெறவே கூடாது என்பதற்காக தென் மேல் முஸ்லம்கள் வடகிழக்கு இணைப்பை ஆதரிக்காமல் எதிர்க்கிறார் கள் என்று எடுத்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் வாழும் சிங்கள மொழி மாகாணங்களிலுள்ள சிங்கள பௌத்த தேசியம் வடகிழக்கு இணைக்கப்பட்ட மாநிலத்தில் தமிழ்த் தேசியம் ஒரு ஆட்சி அதிகாரத்தை உருவாக்கிக் கொள்ள இடமளிக்கக்கூடாது என்பதில் விடாப்பிடியாக இருக்கிறது. வடகிழக்கு இணைந்தால் அடுத்த உச்சம் தமிழீழம் தான் என்றும், தமிழீழம் உருவானால் சிங்களப் பிரதேசங்கள் தமிழரின் அச்சுறுத்தலுக்கு இலக்காகிவிடுமென்றும் இலங்கை குடிசனத்தொகையில் 75% ஆன அவர்கள் 11% ஆன தமிழர்களுக்கு பயப்படுகிறார்களா? பயங்கரப்படுத்தப்பட்டுள்ளார்களா?

அப்பாவி சிங்களப்பொதுமக்கள், சிங்கள அரசியல் தலைவர்கள், சிங்கள சாமிமார்கள், சிங்கள இராணுவம் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரப்பற்களுக்கு இரையான சிங்களவர்களின் துயரங்கள், சிங்களவர்கள் மத்தியில் நாடகங்களாக நடிக்கப்பட்டு, அவர்கள் தமிழீழ அச்சுறுத்தல்களை மறந்து விடாதிருக்க செய்வதில் கவனமாக இருக்கிறார்கள்.

புலிகளின் பயங்கரத்துக்கு இன்னொரு தடவை முகங்கொடுப்பதற்கு அவர்கள் தயாரில்லை. அதற்கான எற்பாடுகளில் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். அவற்றில் முக்கியமானது வடக்கோடு கிழக்கை இணைக்க விடாது தடுப்பதுதான். அந்த நிலைப்பாட்டிலேயே ஏறக்குறைய மொத்த சிங்களவர்களும் அடங்குகின்றனர். நல்லாட்சி அரசாங்கத்தை உயிரோடு வைத்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிக்கு ஆதரவான சுதந்திரக்கட்சி அமைச்சர் களினதும், பாராளுமன்ற உறுப்பினர்களினதும் மன ஓட்டம் அதுவாகத்தான் இருக்கிறது.

அதனால் தென்மேல் புற சிங்கள மாகாணங்களில் வாழும் சுமார் 6% ஆன 13 லட்சம் முஸ்லிம்களும் தம் வாயைத் திறந்து கிழக்கு மாகாண முஸ்லிம் களை வடக்கோடு இணையும்படி பகிரங்கமாக கோரவே மாட்டார்கள். இரகசிய மாக ஆதரிக்கவும் மாட்டார்கள். மாறாக சிங்களவர்களின் கிழக்குப் பிரிவினை கோஷத்துக்கு அமைதியான முறையில் ஆதரவாக இருப்பதாக காட்டிக் கொள்வார்கள். தென்மேல் முஸ்லிம்கள் இவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பது சிங்களவர்களுக்காகத் தான் என்பதைவிட தமது அமைதிக்கும், பாதுகாப்புக்குமாகத்தான் என்று எடுத்துக் கொள்ளுவதே சரியானதாகும். சிங்களவர்களின் அச்சுறுத்தல்களும், நச்சரிப்புக ளும் மென்மேலும் அதிகரித்துவிடக்கூடாது என்பதற்காகவே ஒழிய வடகீழ் முஸ்லிம்கள் இணைந்த வடகிழக்கில் ஒரு சமஷ்டி ஆட்சியைப் பெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தல்ல. தமது வாழ்வை அமைதியாயும் பாதுகாப்பாயும் ஆக்கிக் கொள்ளுவதற்காகத்தான். எனவே தென்மேல் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எவரும் வடகிழக்கு இணைப்பை பகிரங்கமாக ஆதரிக்கமாட்டார் கள் என்பதுடன், அவசியப்படும்போது அதனை எல்லாப்புறங்களில் இருந்தும் - பேச்சு, எழுத்து, உலமாசபை தீர்ப்பு போன்ற முயற்சிகளால் எதிர்ப்பதையும் எதிர்பார்க்கலாம்.

அந்த நிர்ப்பந்த நிலைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரஊப் ஹக்கீமும் விதிவிலக்கானவர் ஆகமாட்டார். வடகிழக்கு இணைப்பை பகிரங்கமாக ஒற்றைக் காலில் நின்று ஆதரிப்பவராக அவரால் இருக்க முடியாது. ஏனெனில் அவரும் ஒரு தென்மேல் முஸ்லிம் என்பதால். அப்படி அவர் வடகிழக்கு இணைப்பை ஆதரிப்பவராக இருந்தால் தென்மேல் முஸ்லிம்களின் முகங்களில் கரிபூசுவதிலேயே முடியும். ஆனால் வடகிழக்கை மையப்படுத்திய முஸ்லிம் களின் உரிமையை வென்றெடுப்பதனை முற்படுத்தி ஆரம்பித்த கட்சிதான் முஸ்லிம் காங்கிரஸ் என்பது ஹக்கீமுக்கு தெரியாத விடயமல்ல.

இப்போது ஹக்கீம் எதிரும் புதிருமான இரண்டு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்யவராய் இருக்கிறார். அவர் நிலை இருதலைக்கொள்ளி எறும்பாக மாறியிருக்கிறது. ஆகவே அவர் உடனடியாக எதனையாவது செய்தே ஆகவேண்டும். எதனைச் செய்வது? எப்படிச் செய்ய வேண்டும்? சரியெனப் பட்டதை தியாகத்தோடாயினும் செய்ய தயாராக இருக்க வேண்டும். அவர் தயார் தானா?

வடகிழக்கில் விதை நடப்பட்டு, வேரோடு விடப்பட்டு, விருட்சமாய் வளர்க்கப் பட்டு, போதாதற்கு வட கிழக்கிலேயே மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ்

என்று இரண்டு குட்டிகளும் போட்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் வடகிழக்கு முஸ்லிம்களை வாடவிட்டு தென்மேல் முஸ்லிம்களுக்கு நிழலை வார்க்கப் போகிறதா? பூக்களையும், பழங்களையும் சொரியப்போகிறதா? வடகீழ் முஸ்லிம்களை கை கழுவி விடப்போகிறதா? என்ற மாபெரும் பிரச்சினையில் ரஊப் ஹக்கீம் மூழ்கடிக்கப்பட்டுள்ளார்.

வடகீழ் முஸ்லிம்களின் இருண்ட, இரத்தம் படிந்த இரவு ஒன்றில்கூட வடகிழக்கில் வாழ்ந்து பார்த்திராத, அந்தக் காலத்தின் காயங்களையும், சோகங்களையும் ஒரு நாள் கூட அனுபவித்திராத ரஊப் ஹக்கீம், தென்மேல் முஸ்லிம் மட்டும் தானே ஒழிய தன் பிறப்பால், வளர்ப்பால், வாழிடத்தால், பொருளாதார நடவடிக்கைளால் வடகிழக்கு முஸ்லிம் தேசியத்தை சேர்ந்தவர் அல்ல. இது சட்ட முதுமானியான, சபை சந்திக்கு முற்படுத்தக்கூடிய தகைமை கள் உள்ளவரான, சகலதையும் சமாளித்துப்போகக்கூடிய கலை கைவந்தவ ரான ரஊப் ஹக்கீம், வடகீழ் முஸ்லிம்களின் அமைதி பாதுகாப்பைக் கருதி அவர் குருநாதர் அஸ்ரபின் கனவில், லட்சியத்தில், வட கீழ் முஸ்லிம்கள் அமைதி பாதுகாப்பில் மண்ணை வாரி இறைக்கப்போகிறாரா? என்பதுதான் இன்று முக்கியத்துவப்பட்டிருக்கும் கேள்வியாகும்.

அவர் இப்போது என்ன செய்ய வேண்டும்? வடகீழ் முஸ்லிம்களின் ஆட்சி அதிகாரத்திற்கு ஆதரவளிப்பதன் மூலம் அவர்கள் வாழ்வில் வசந்தத்தை, நிரந்தரப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வெளிப்படையாய். முழு மூச்சாய் போராடுவதா? அல்லது அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து தென்மேல் முஸ்லிம்களை திருப்திப் படுத்துவதை தெரிந்துகொள்ளுவதா? அவர்தான் சொல்ல வேண்டும்.

அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை தனது உரிமைப் பிரச்சினைகளுக் காய் கட்சிக் குள்ளேயே நியாயம் கேட்டுப் போராடிக் கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஹசன் அலியாவது பகிரங்கமாகச் சொல்ல மாட்டாரா? அல்லது கட்சியின் நிதிமோசடி குற்றச்சாட்டை முற்படுத்தி கட்சியைக் கலவரப் படுத்திக் கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பசீர் சேகுதாவுத் ஆவது பகிரங்கமாச் சொல்லமாட்டாரா? இவர்கள் போகட்டும், வடகீழ் முஸ்லிம் தேசியத்தின் அபிலாஷைகள் பற்றி முஸ்லிம் காங்கிரசின் மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற, மாகாண சபை, உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பகிரங்கமாகச் சொல்லமாட்டார்களா? முஸ்லிம் களின் பிரச்சினைகளை ஆறப்போட்டு அபிவிருத்தி வேலைகளை செய்து பிரபல்யத்தைத்தேடி அடுத்தடுத்த முறைகளிலும் மக்கள் பிரதிநிதிகளா

வதற்கான மார்க்கத்தையா தேடிக்கொண்டிருக்கிறார்கள்?

இந்த மூடி மறைக்கப்பட்டுள்ள பிரச்சினைக்கு முக்கிய காரணம் முஸ்லிம் காங்கிரசின் மொத்தத் தலைவராய் ரஊப் ஹக்கீம் இருப்பதுதான் என்பது தெரிகிறது. அதனால் அந்த பிரச்சினையை இலகுவாக தீர்க்கும் வழி ஏதேனும் உண்டா என்று பார்ப்பதே இன்று பிரதானப்பட்டுள்ளது.

வடகிழக்கில் உதயமாகி அதிபெரும்பான்மையான ஆதவராளர்களையும், அதிக பட்ச மக்கள் பிரதி நிதிகளையும் வடகிழக்கிலேயே முஸ்லிம் காங்கிரஸ் கொண்டிருப்பதனால் வடகீழ் முஸ்லிம்களின் உரிமைப் பிரச்சினைகளுக்கு தலைமை தாங்க வடகீழ் முஸ்லிம் தேசியத்தைச் சேர்ந்தவரான செயலாளர் நாயகம் ஹசன் அலியை முஸ்லிம் காங்கிரசின் வடகிழக்கிற்கான ஒரு தலைவராக்கிக் கொண்டு, தென்மேல் முஸ்லிம்களைச் சேர்ந்தவரான ரஊப் ஹக்கீமை தென்மேல் முஸ்லிம்களின் விவகாரங்களுக்கும் சர்வதேச விவகாரங்களுக்குமான தலைவராக்கி முஸ்லிம் காங்கிரசில் இரட்டைத் தலைமைத்துவத்தை அறிமுகப்படுத்த வேண்டியது தான் இப்போதைக்குள்ள வழியாகத் தெரிகிறது.

முஸ்லிம் காங்கிரசுக்கு வடகிழக்கு உயிராயும், உடலாயும் இருந்தபோதும் தென்மேல் முஸ்லிம்கள் உடலின் உறுப்புகளில் சிலவாக இருப்பதுவும் உண்மைதான். ஆனால், உயிரைப்போகவிட்டு சில உறுப்புகளை வைத்துக் கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் உயிர் வாழ்வது எங்ஙனம்? காங்கிரஸ் காரர்களைத் தொடர்ந்து பதவி பட்டங்களின் ஆசையில் பம்பரம் சுற்றவைத்துக் கொண்டிருப்பதன் மூலமா?

முஸ்லிம் காங்கிரசும் இருக்க வேண்டும். வடகீழ் முஸ்லிம்களின் அபிலாசைகளும் வென்றெடுக்கப்பட வேண்டும். ரஊப் ஹக்கீமும் தலைவராக இருக்கவேண்டும் என்றால் முஸ்லிம் காங்கிரசுக்கு இப்போது உள்ள வழி இரட்டைத் தலைமைத்துவத்தைவிட வேறு எதுவுமில்லை. முஸ்லிம் சமூகத் தின் தலைமைத்துவத்தை இதுகாலவரை வைத்திருந்த முஸ்லிம் காங்கிரஸ் அடுத்தடுத்த தேர்தல்களில் தனது தலைமைத்துவத்துக்கான தகுதியை இழந்து றிசாட்டின் கனவான மக்கள் காங்கிரசை முஸ்லிம் தலைமைத்து வத்துக்கு கொண்டுவரப்போவதிலேயே இந்த இழுபறி முடியப்போகிறது.

எனவே சாதாரண சட்டத்தரணியாக இருந்த ரஊப் ஹக்கீமை பாராளுமன்ற உறுப்பினராக்கி, பாராளுமன்ற குழுத்தலைவராக்கி, காங்கிரசின் தலைவராக்கி,

அமைச்சராக்கியதெல்லாம் வடகீழ் முஸ்லிம்களின் பலத்தால் உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரசாலேயே நடைபெற்றது. அந்த நன்றிக் கடனுக்காகவாவது வடகீழ் முஸ்லிம்களின் வாழ்வில் ஒளியேற்ற ஹக்கீமுக்கு தன்னால் முடிய வில்லையாயினும் கூட வேறு ஒரு பொறுப்புள்ளவரை வைத்தாவது விளக் கேற்றி வைக்கலாம் அல்லவா? இந்த வேறொருவர் தான் இரட்டைத் தலைமைத்துவ முஸ்லிம் காங்கிரசின் வடகிழக்குக்கான தலைவராக இருப்பார்.

அந்த வடகிழக்குத் தலைவர் அவசியப்படும்போது வடகிழக்கின் இணைப்பைப் பற்றி பேசவும், செயல் படவும் வடகீழ் முஸ்லிம்களின் ஆதரவை பெறுவார். வடகீழ் முஸ்லிம் தேசியத்தைச் சேர்ந்த வடகீழ் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் வடகீழ் இணைப்பைப் பற்றியோ, பிரிவைப் பற்றியோ உத்தியோக பூர்வமாக பேசும் தத்துவமுடையவராக இருப்பார். ஆனால் தென்மேல் முஸ்லிம்களுக்கான முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தென்மேல் முஸ்லிம்களின் பேச்சாளியாய், செயலாளியாய் இருப்பார். இது ஒன்றுதான் இப்போதைக்குள்ள வழியாகத் தெரிகிறது. மு.காவின் வடகீழ் உறுப்பினர்கள் வடகிழக்கு இணைப்பை ஆதரிக்க வேண்டுமென்றும், மு.காவின் தென்மேல் ஆதரளவாளர் கள் தென்மேல் மொத்த முஸ்லிம்களின் நலனை உறுதிப்படுத்தும் கிழக்குப் பிரவினைக்கு ஆதரவளிக்க முடியும் என்றும், ஒரே கட்சிக்கு இரண்டு புறங்களிலும் இருந்து நேர் எதிரான நிலைப்பாடுகளை எடுப்பது எப்படி சாத்தியமாகும்? என்ற ஒரு கேள்வி இருக்கிறது. இந்த நேர் எதிரான நிலைப்பாடுகள் முஸ்லிம் காங்கிரசுக்கு புதிய விடயமே அல்ல. '90களில் இந்திய அமைதிகாக்கும்படை இலங்கையை விட்டு வெளியேற வேண்டுமென்ற நிலைப் பாட்டை அன்றைய ஜனாதிபதி பிரமேதாசா புலிகளின் ஆதரவோடு முன்வைத்தார். அப்போது தென்மேல் சிங்கள மாகாண சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்த மு.கா. முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர்கள் தென்மேல் சிங்களவர்களோடு சேர்ந்து இந்திய அமைதி காக்கும்படை இலங்கையை விட்டும் வெளியேற வேண்டும் என்ற பிரேரணைக்கு ஆதரவாகவே வாக்களித் தனர். தென்மேல் முஸ்லிம்களின் அமைதி பாதுகாப்பை உத்தரவாதம் செய்யும் நோக்குடன். மு.கா. அங்கெல்லாம் அந்தத் தீர்மானத்தையே ஆதரித்தது.

அதே பிரேரணை வடகீழ் மாகாண சபையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது அங்கிருந்த மு.காவின் உறுப்பினர்கள் இந்திய அமைதி காக்கும்படை வெளியேறக்கூடாது என்ற நிலைப்பாட்டையே ஆதரித்தனர். மு.காவின் மாகாண சபை உறுப்பினர்களான சம்மாந்துறை மன்சூரும், அக்கரைப்பற்று அலி உதுமானும் விடுதலைப் புலிகளாலும், ஈழதேசிய ஜனநாயக விடுதலை

முன்னணியாலும் படுகொலை செய்யப்பட்டனர். வடகீழ் மாகாணசபை மு.கா. உறுப்பினர்களின் உயிருக்கே பாரிய அச்சுறுத்தல் இருந்த நேரத்திலும் வடகீழ் முஸ்லிம்களின் அமைதி பாதுகாப்பை முற்படுத்தி, உறுதிப்படுத்த முஸ்லிம் காங்கிரஸ் அந்த நிலைப்பாட்டையே எடுத்தது. அப்போது வடகீழ் மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவராய் நான்தான் இருந்தேன். தீர்மானம் ஏகமனதாகவே நிறைவேறிற்று.

அப்போது ஏன் மு.கா. இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டுமென்று தென்மேல் புறத்திலும், ஏன் வெளியேறக்கூடாது என்று வடகிழக்குப் புறத்திலும் இரட்டைத் தீர்மானம் எடுத்தது என்று யாரும் கேட்கவில்லை. ஏனெனில் எல்லோருக்கும் இந்த ஒன்றுக்கொன்று நேர் எதிரான இரண்டு தீர்மானங்களின தும் அடிப்படையாக இருந்தது சிங்களமொழி, தமிழ்மொழி பிரதேசங்கள் என்ற இரண்டு பிரதேசங்களிலும் வாழ்ந்த முஸ்லிம்களின் அமைதி பாதுகாப்பே ஆகும்.

அதேபோன்று எத்தனை தீர்மானங்கள் என்றோ, எத்தனை தலைவர்கள் என்றோ எண்ணிக் குழம்பத் தேவையில்லை. எல்லாத் தீர்மானங்களுக்கும், எல்லாத் தலைவர்களுக்கும் அடிப்படையான கடமைப்பாடு மொத்த முஸ்லிம் களின் அமைதி பாதுகாப்பை தமக்கு முடிந்த அளவில் உறுதிப்படுத்துவது தான். எந்த விடயத்தில் எல்லாரும் ஒன்றிணைந்து ஒரு கருத்தை முன்வைப் பது சாத்தியமோ அந்த விடயத்தில் அப்படிச் செய்வார்கள். வடகீழ் தமிழ்த் தேசியம் இணைப்பையும் சமஷ்டி ஆட்சியையும் கோரியுள்ளதைப் பற்றி தென்மேல் புறத்து சுமார் 7 லட்சம் தமிழர்கள் எதுவித பதற்றமும் அடைய வில்லை.

வடகிழக்கு இணைக்கப்படும்போது வடகிழக்கு முஸ்லிம் தேசியத்திற்கும் சமமான ஆட்சி அதிகாரம் கிடைக்க வேண்டுமென வடகீழ் முஸ்லிம் தேசியம் கோரினால் தென்மேல் புறத்தில் வாழும் சுமார் 13 லட்சம் முஸ்லிம்கள் பதற்றப்படுகிறார்கள். சிங்கள மாகாணங்களில் வாழும் ஏழு லட்சம் தமிழர்களுக்கு இல்லாத பதற்றமும், பயமும் அங்கேயே வாழும் சுமார் 13 லட்சம் முஸ்லிம்களுக்கு இருக்கிறது என்பது பற்றி ஆழ்ந்த கவலையோடு சீரணிக்க வேண்டியிருக்கிறது.

அளுத்கமையில் நடைபெற்ற சிங்கள இனவெறி சாமிகளின் காட்டுதர்பார் கலவரத்தில் 3 முஸ்லிம்கள் கொல்லப்பட்டு கோடிக்கணக்கான உடைமை களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டபோது வடகீழ் முஸ்லிம்கள் அது தென்மேல்

முஸ்லிம்களின் பிரச்சினை என்று சும்மா இருக்கவில்லை. அந்த ஆட்சியையே மாற்றக் காரணமாக இருந்தார்கள். வடகீழ் முஸ்லிம்களின் சுமார் 3 லட்சம் வாக்குகளே ஆட்சி மாற்றத்தை இறுதியாக தீர்மானித்தது என்பது தென்மேல் முஸ்லிம்களுக்கும், தென்மேல் முஸ்லிம் தலைவர்களுக்கும் இன்னும் முழுமையாக தெரியவில்லை என்றே நினைக்கத் தோன்றுகின்றது. இது தென்மேல் முஸ்லிம்களின் பிரச்சினை என்று வடகீழ் முஸ்லிம்கள் அவர்களை எதிர்த்து வாக்களித்திருந்தால் ஆட்சி மாற்றம் நடைபெற்றிருக்காது. தென்மேல் முஸ்லிம்கள் மேலும் மேலும் கொடுமைப்படுத்தப்பட்டிருப்பார்கள். எனவே இது வடகீழ் முஸ்லிம்கள், தென்மேல் முஸ்லிம்களின் ஒட்டுமொத்த நன்மைக் காய் எடுத்த தீர்க்கமான முடிவு என்பதை தென்மேல் முஸ்லிம்கள் தீவிரமாய் சிந்தித்துக் பார்க்க வேண்டும்.

ஆனால் இப்போது வடகிழக்கு முஸ்லிம்களுக்கு வடகிழக்கில் சமமான ஆட்சி அதிகார பகிர்வுக்கான சந்தர்ப்பம் அண்மித்துள்ளது. அதை அவர்கள் அடைந்தே தீர வேண்டும். அதற்கு விரோதமாக எந்தக் கட்சியும், எந்தத் தலைவர் நடந்தாலும் விரும்பத்தகாதவையாக இருக்கும் சாத்தியமே உண்டு.

தென்மேல் முஸ்லிம்களை திருப்திப்படுத்தியே ஆகவேண்டுமென்று ஹக்கீம் விரும்புவாரானால், வடகீழ் மு.கா. தலைமையை உடனே உருவாக்கி முன் சொன்னவாறு ஒரு தலைவரைத் தெரிந்து, முஸ்லிம் காங்கிரசை இரட்டைத் தலைமைத்துவ கட்சியாக்குவது தவிர வேறுவழி தெரியவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்னரேயே இதைத்தான் முஸ்லிம் காங்கிரசுக்கு நான் பத்திரிகை வாயிலாக அறிவித்திருந்தேன். ஆனால் இப்போதுதான் அதற்கு காலம் கனிந்து வந்திருக்கிறது போல் தெரிகிறது. இன்ஷா அல்லாஹ்! என்ன நடக்கிறது என்று இருந்து பார்ப்போம்.

13.02.2002 இல் ரஊப் ஹக்கீமின் ஒரு பிறந்த தினத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அவருடைய இடத்தில் ஹக்கீம் சந்திக்கச் சென்று வடமாகாண முஸ்லிம்களை தமது பாரம்பரிய வாழிடங்களில் மீள் குடியேற அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார். அதனால் சில வடமுஸ்லிம் குடும்பங்கள் மீள் குடியேற முடிந்ததற்கும் ரஊப் ஹக்கீம்தான் காரணம் என்பதை வடகீழ் முஸ்லிம்கள் என்னென்றைக்கும் நன்றியோடு நினைவுகூர கடமைப்பட்டுள்ளார்கள்.

சிலவேளைகளில் தாமே மு.காவின் இரட்டைத் தலைவர்களில் ஒருவராக இல்லாமல் மொத்த முஸ்லிம் காங்கிரசின் தலைவராக இருக்க வேண்டு

மென்றும் ரஊப் ஹக்கீம் நினைத்து வடகீழ் முஸ்லிம்களின் அபிலாஷையான சமஷ்டி ஆட்சிக்கு எதிராக தொழிற்படுவாரேயானால், வடகீழ் முஸ்லிம்களின் அமைதி பாதுகாப்பிற்காக அவருக்கு அளிக்கப்பட்ட அல்லாஹ்வின் அமானிதத் திற்கு அவர் மோசடி செய்தவராகவே வாழ்ந்து சாவார். எதற்கும் முன்னு தாரணங்கள் காங்கிரசில் இல்லாமல் போகாது.

கிழக்குப் பிரிவினைவாதத்துக்குள் கிழக்கு முஸ்லிம்களுக்கு மட்டுமான ஆட்சி அதிகாரத்தை கோருபவர்களும் உருவாகி இருக்கிறார்கள். பழைய பெரும் முஸ்லிம் அதிகார பேச்சாளியிலிருந்து புதிதாய் ஜனித்திருக்கும் முஸ்லிம் அமைப்புகளும் இதில் அடங்குவர். சாத்தியமற்ற ஒன்றை நோக்கி கட்டிய சவாரி ஆரம்பித்த இடத்திலேயே அசைந்து அசைந்து நிற்குமென்பது அனுபவத்தில் உள்ளதாகும்.

தம்மைவிட 6 லட்சம் குறைவாக உள்ள தென் புறத்து தமிழர்களின் துணிவும், தூரநோக்கும் தென்புறத்து 13 லட்சம் முஸ்லிம்களிடம் இல்லையே என்பது மனதில் பாரமாக அழுத்துகிறது. வடகீழ் முஸ்லிம் தேசியம் மட்டுமல்ல, இந்த நாட்டில் வாழும் மொத்த முஸ்லிம்களும் வடகிழக்கு முஸ்லிம் சமஷ்டியை அச்சம் களைந்து ஆதரிக்க வேண்டுமென்பது எமது வேண்டுதலாகும்.

ஏனெனில் அவர்கள் ஆதரிக்கப்போவது தமிழர் கோரும் வடக்கு கிழக்கு இணைப்பையல்ல. ஆனால் முஸ்லிம்களுக்கான சமஷ்டி ஆட்சியைத்தான். வடகிழக்கு இணைக்கப்பட்டு தமிழர்களுக்கு ஒரு சமஷ்டி ஆட்சி கிடைக்கும் போது, முஸ்லிம் சமஷ்டி ஆட்சியும் அமைக்கப்படுமானால் அது மொத்த நாட்டுக்கே நன்மையானதாகத் தான் இருக்கும். வட கிழக்கு தமிழர் சமஷ்டி யின் தமிழீழ முன்னெடுப்புக்கு அது தடையாகவே இருக்கும் என்பதை சிங்கள பௌத்த தேசியமும் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான பிரச்சினையின்போது நடுநிலைச் சமூகம் என அல்குர்ஆனில் வர்ணிக்கப்பட்டுள்ள முஸ்லிம் சமூகம் தமிழருக்கும் சிங்களவருக்குமிடையில் ஒரு சமாதான பாலமாக தொழிற்பாடுவார்கள் என்பதை சொல்ல வேண்டிய அவசியமில்லை. தென்மேல்மாகாண முஸ்லிம்கள் மீது சிங்கள இனவெறிச் சாமிகள் சுரண்டிக்கொண்டிருப்பதற்கு எதிராக முழு உலகத்தினது கவனத்தையும் ஈர்க்கக் கூடிய வகையில் சமஷ்டி ஆட்சியின் அந்தஸ்தில் வடகீழ் முஸ்லிம் சமஷ்டி தொழிற்படும் என்பதையும் சொல்லிக் காட்ட வேண்டியது அவசியமாகியுள்ளது.

ரஊப் ஹக்கீமை முழுத்தலைவராக வைத்துக்கொள்ள வேண்டுமாயின் வடகீழ் முஸ்லிம் சமஷ்டி உருவாக்கத்திற்கான ஆதரவை தென்மேல் முஸ்லிம்கள் மனப்பூர்வமாய் தெரிவிக்க வேண்டும். அவர்களை அப்படி வளைத்தெடுக்க ரஊப் ஹக்கீமுக்கு முடியாமல் போய்விட்டால், வடகிழக்குக்கென தனியான தகுதியான தலைவரைத் தெரிந்து அவர் மூலம் வடகீழ் சமஷ்டியை நனவாக்க ரஊப் ஹக்கீம் தயங்கக் கூடாது.

அப்படிச் செய்வதனால் ரஊப் ஹக்கீம் மீது தென்மேல் முஸ்லிம்களின் பழியும் பாவமும் வந்து சேராது. அந்தப் பொறுப்பு வடகீழ் தேசியத்துக்குரிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹசன் அலி மீது விழும். தென் மேல் முஸ்லிம்களின் ஏச்சும் பேச்சும் ஹசன் அலி அலிக்காய் இருக்கும். அதை அவர் பொருட்படுத்த மாட்டார். வடகிழக்கு முஸ்லிம்களுக்கு சமஷ்டியும் தென்மேல் முஸ்லிம்களுக்கு நிம்மதியும் கிடைக்கும். இதைத்தான் ரஊப் ஹக்கீமும் விரும்பக்கூடும். இந்த இரட்டைத் தலைமைத்துவத்தின் நோக்கம் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களிலிருந்து ஒதுக்கப்பட்டுவிட ஒருபோதும் இடமளிக்கக் கூடாது என்பதும் தான்.

தான் பொது செயலாளர் நாயகமாகவே இருக்க விரும்புவதாக ஹசன் அலி தெரிவித்தால், வடகீழ் தலைவராக பஷீர் சேகுதாவூதை தெரிந்து கொள்ளலாம். தென்மேல் தலைவர் ரஊப் ஹக்கீம், வடகீழ் தலைவர் பஷீர் சேகுதாவூத் பொது செயலாளர் நாயகம், ஹஸன் அலி என்ற சமன்பாடும் மேலதிகமாய் இருக்கிறது.

இந்த மிக முக்கியமான கால கட்டத்தில் முழு நாட்டு முஸ்லிம்களினதும் அமைதி பாதுகாப்பையும் இரட்டை தத்துவத்தின் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதால் முஸ்லிம் காங்கிரசின் உட்கட்சிப் பூசல்களையும் முற்றாய் ஒழித்து முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்தும் பணியில் முழு ஆர்வமாய் இயங்க இந்த இரட்டை தலைமைத்துவ ஏற்பாடு இடம் கொடுக்கும்.

ஆயிரம்நாள் அடிமைப்பட்டு வாழ்வதைவிட ஒருநாள், ஒரே ஒருநாள் சுதந்திர புருஷனாய் வாழ்ந்து மடிவது புனித யுத்தத்தைச் சேர்ந்த விடயமாகும். தன் தாயின் கர்ப்பத்தில் இருந்து தரையில் கால் வைக்கும் போது ஒவ்வொரு முஸ்லிமும் தர்ம யுத்தத்திற்கு தான் தயாராகவே இருப்பதாக தன் தாயிடம் சத்திய வாக்குச் செய்து கொடுத்து விட்டுத்தான் வெளியேறுகிறான். அவன் தான் முஸ்லிம். அவன் தான் இஸ்லாத்தின் பிரதிநிதி.

ஆண்டிகள் கூடி மடம் கட்டிய கதையாக இல்லாமல் முஸ்லிம் சமஷ்டிக்கான அஹிம்சை போராட்டத்தில் அனைத்து முஸ்லிம் கட்சிகளும் அமைப்புகளும் ஒன்றிணைய வேண்டும்.

முஸ்லிம்களின் தாகம் சமத்துவத் தாயகம்!

- அல்லாஹு அக்பர் -

முஸ்லிம் தேசிய முன்னணிக்காக,
வேதாந்தி, சுபைதா ஹசன் சேகு இஸ்ஸதீன்
முன்னாள் அமைச்சர்
சேகுமலைச்சோலை, மதினாபுரம்
077 3588 999

சொல்லுறத சொல்லிப்புட்டன்
செய்யிறத செஞ்சிக்கிங்க
நல்லதுன்னா கேட்டுக்கங்க
கெட்டதுன்னா விட்டுடுங்க.
(சினிமாக் கவிதை)

ஹம்து ஸலவாத்துடன்

இது ஒரு தேசத்தின் விண்ணப்பமாகும்.
தான் காணப்படாமலும், தேடப்படமாலும்
விடப்பட்டுள்ள சோகம் பற்றி
இந்தத் தேசம் முறையிடுகிறது.
தனக்குரிய அந்தஸ்து தரப்படாமலும்,
தட்டிக் கேட்கப்படாமலும் விடப்படுவதில்,
இந்தத் தேசம் தாங்கொணாத வேதனை அடைகிறது.
மெய்ஞ்ஞான வேதத்திற்கும், அஞ்ஞான வாழ்முறைக்கும்
உரித்துடைய முஸ்லிம்களின் தாயகப்பூமி
தானென்று இந்த அறியப்படாத தேசம்
உரிமை கோருகிறது.
நிலமும், நீரும், கடலும், காடும்
சொந்தமாகக் கொண்ட
தனது எல்லைகளை காட்ட
அது தேசப்படத்தை திரை நீக்கம் செய்கிறது.
சுடு கலன்களின் புகைப்படங்களால்
தான் மூடப்பட்டிருப்பதனால்,
தன்னை இழந்துவிடத் தயாராகிவிட்ட
தனது மக்களின் இயலாமைக்காய்,
அறியாமைக்காய் அது வருந்தகிறது.
முஸ்லிம் தேச சஞ்சாரத்துக்கென,
நான் சவாரி கட்டிக்கொண்டபோது
அந்த மாதா,
என் காதில் ஓதி ஊதிய செய்தியில்
இப்போதைக்கென்று இவ்வளவையும்
அமானிதமாக அறிவித்துள்ளேன்.
முஸ்லிம் தேசத்தாயின் இதயக்குமுறல் தணிக்கப்படும்.
கண்ணீர்துளிகள் துடைக்கப்படும்.
இந்த மகத்தான மாதாவின் மனதை
மகிழச் செய்யும் நாள் வந்தே தீரும்.
அது வரை என்னைத் தொட்டும், தொடர்ந்தும்
நூற்றுக்கணக்கான பேனாப் போராளிகள்
தளம் அமைப்பர்.
ஆயிரக்கணக்கான முஸ்லிம் தேசியப்போராளிகள்
களம் குதிப்பர். - இன்ஷா அல்லாஹ்! -
முஸ்லிம்களின் தாகம் சமத்துவத் தாயகம்!

- *முஸ்லிம் தேசிய தொண்டன்* -

# முஸ்லிம் தேசியத்தின் முழக்கம்

இனவெறியர்கள் கொன்று குவித்த
இஸ்லாமியர்களின் எலும்புக்கூடுகளை
எடுத்துக்கொண்டு வா!
முஸ்லிம் தேசியத்தை வளைத்து
வேலிக்கால்களாய் நட்டு வைப்போம்.

அவர்கள் இரத்தம் தோய்ந்த மண்ணைப்
பிசைந்து கொண்டு வா!
முஸ்லிம் தேசியத்தின் கோட்டையை
முழு மூச்சாய்க் கட்டுவோம்.

தூக்கம் தொலைத்துப் பழகிப்போன
முஸ்லிம் தாய்க்குலத்திற்கு
பயிற்சிகொடு!
முஸ்லிம் கோட்டையைச் சுற்றிக்
காவலுக்கு நிறுத்தி வைப்போம்.

இறைவணக்கத்தில் கொல்லப்பட்ட
இஸ்லாமியரின் இதயத்துடிப்புக்களைப்
பதிவு செய்து கொண்டு வா!
உலகம் முழுவதும் நம் தேசிய கீதமாய்
ஒலிபரப்புவோம்.

கூடுவிட்டுக் கூடுபாயும்
மாயஜால வித்தையைக்
கற்றுக்கொண்டு வா!
நம் இளைஞர்கள் நரம்புகளில்
'பதுறுப்' படையினரைப்
புகுத்தி வைப்போம்.

சுதந்திர யாத்திரைக்குச்
சவாரி கட்டு!
தேசியக் கொடியில்
அலிஃபைப் பொறி!
முஸ்லிம் தேசியம் கனவுமல்ல
சுயநிர்ணயம் கற்பனையுமல்ல.



நாரே தக்பீர்!
அல்லாஹு* அக்பர்!

- வேதாந்தி -

0773 588 999